PUBLIC LIBRARY

உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

Public Library
Jaffna

30/=

சிவம்-04 சார்வரி வருடம் பங்குனித் திங்கள் மார்ச் 2021 பூமி-01

## “சைவ மக்களின் பழம்பெரும் கிராமம் பெருமையுடைகிறது”

### மயிலிட்டி கந்தபுராண ஆச்சிரம திறப்புவிழாவில் பிரதேச செயலாளர் பெருமிதம்

“சைவ மக்களின் பழம்பெரும் கிராமமான ஆதிமயிலிட்டியில் இருபத்தொன்பது ஆண்டுகளுக்குப் பின்பு மக்கள் மீளக் குடியேறி தங்கள் வீடுகளையும் ஊரிலுள்ள ஆலயங்களையும் மீளவும் கட்டியெழுப்பி வருகிறார்கள். இந்நிலையில் இரு



மாடிகள் கொண்ட கட்டடத்தில் சிவபூமி கந்தபுராண ஆச்சிரமம் அமைக்கப்பட்டுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்” என சிவபூமி அறக்கட்டளையினரால் அமைக்கப்பட்ட கந்தபுராண ஆச்சிரமத்தின் திறப்புவிழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வலி. வடக்கு பிரதேச செயலாளர் திரு. சிவஸ்ரீ அவர்கள் தெரிவித்தார்.

இவர், தொடர்ந்து பேசும்போது, “சிவபூமி அறக்கட்டளை தலைவரும், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவருமான ஆறு. திருமுருகன் அவர்களின் பெரும் முயற்சிகளை பாராட்டுவதில் பெருமையடைகிறோம். அவரது பணிகளை சைவத்தமிழ் மக்களால் என்றுமே மறக்க முடியாது. இத்தகைய சேவையாளர்களுக்கு நாங்கள் அனைவரும் என்றுமே பக்கபலமாக இருக்க வேண்டும்” என்றும் குறிப்பிட்டார்.

கடந்த ஜனவரி மாதம் 28ஆம் திகதியன்று தைப்பூச நன்னாளில் மேற்படி கந்தபுராண ஆச்சிரமம் மங்களகரமாகத் திறந்து வைக்கப்பட்டது. ஆச்சிரமக் கட்டடத்தில் அமைக்கப்பட்ட ‘அபயம்’ இலவச மருத்துவமனையும் இதே நாளன்று யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் திரு. த. சத்தியமூர்த்தி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இவர் தனது உரையின்போது, “உளப்பிணியையும் உடற்பிணியையும் போக்கும் நிலையமாக இந்த கந்தபுராண ஆச்சிரமம் அமைந்துள்ளது. அபயம் மருத்துவ சேவையினர் சிவபூமி அறக்கட்டளையுடன் இணைந்து மூன்றாவது இலவச மருத்துவ நிலையமாக இதனை ஆரம்பித்துள்ளார்கள். ஆறு. திருமுருகன் அவர்களால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முயற்சியும் சமூகத்துக்கு பெரிதும் பயனுடையதாக இருக்கிறது. இவருடன் இணைந்து எங்கள் மண்ணை விருத்தி செய்ய அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்” என்று தெரிவித்தார்.

கந்தபுராண ஆச்சிரமத்தின் திறப்பு விழா நிகழ்வின்போது அமெரிக்கா ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். மேற்படி ஆச்சிரமத்திற்கான நிலத்தையும், கட்டடத்தையும் அன்பளிப்பாக வழங்கிய திரு. சுகுமாறன் தம்பதியினரால் ஆச்சிரமக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

## நல்லூரான் இரண்டாவது அலங்கார வளைவு கட்டுமானப் பணி ஆரம்பம்



வரலாற்றுப் பெருமை வாய்ந்த நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு செல்லும் பிரதான பாதைகளில், நான்கு பக்கங்களிலும், நுழைவாயில் அலங்கார வளைவு அமைக்கும் செயற்திட்டத்தின் இரண்டாவது வளைவுக்கான கட்டுமானப் பணி இப்போது ஆரம்பமாகியுள்ளது. யாழ். கோவில் வீதியில் நல்லூர் கைலாச பிள்ளையார் கோவிலுக்கு முன்னால் மேற்படி நல்லூரான் அலங்கார வளைவு நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, நாவலர் வீதியுடன் இணையும் கோவில் வீதி சந்தியிலிருந்து நல்லூர் கந்தசுவாமி ஆலயம் வரையிலான பாதை இம்மாதம் 8ஆம் திகதியிலிருந்து ஒரு மாத காலம் வரை போக்குவரத்துக்கு தற்காலிகமாக தடைசெய்யப்பட்டிருப்பதாக யாழ். மாநகர முதல்வர் தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் சிறிய வாகனங்கள் மாற்றுப்பாதைகளாக, செட்டித்தெரு வீதி, செட்டித்தெரு ஒழுங்கை (சின்மயா மிஷன் வீதி) ஊடாக பயணிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கனரக வாகனங்கள் இந்தப் பாதைகளை பயன்படுத்த முடியாது.

முதலாவது நல்லூரான் அலங்கார வளைவு ஏ9 வீதியிலிருந்து நல்லூருக்கு திரும்பும் செம்மணி வீதியின் ஆரம்பத்தில் நிறுவப்பட்டிருப்பதுடன், கடந்த தைப்பொங்கல் தினத்தன்று அது திறந்து வைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் வருகை தந்த இலங்கைக்கான இந்திய தூதுவர் நல்லை ஆதீனத்தில் ஆன்மீகத் தலைவர்களை சந்தித்தார்



இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே அவர்கள் இம்மாதம் 12ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) காலை யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜய மொன்றை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின் போது அவர் பலரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அந்தவகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சென்ற அவர் அங்கு இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.


இதன் பின்னர் நல்லை ஆதீனத்திற்கு வருகை தந்த அவர் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளை சந்தித்து ஆசிபெற்றுக்கொண்டார். இதன்போது சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களும், மறவன்புலவு க.சச்சிதானந்தன் அவர்களும் கலந்து கொண்டனர்.

## யாழ்.கொமர்ஷல் வங்கி புதிய இடத்தில்



யாழ்ப்பாணம் கொமர்ஷல் வங்கி இம்மாதம் 15ஆம் திகதி முதல் புதிய கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. வங்கியின் சொந்தக்கட்டடமான இல 474, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

## சிவபூமி பாடசாலைக்கு நிரந்தர நிதிவைப்பு





சிவபூமி அறக்கட்டளையினரால் நடத்தப்பட்டு வரும் கோண்டாவில் சிவபூமி பாடசாலைக்கு அமரர் அமிர்தசேகரன் நினைவாக ஒரு தொகை பணம் வைப்பிலிடப்பட்டு நிரந்தர நிதி அறக்கட்டளை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இணுவில் கிராமத்தைச் சேர்ந்த தற்போது கனடாவில் வசித்துவரும் பெற்றோர்களான திரு.பேரின்பநாயகம் தம்பதியினரால் மேற்படி அறக்கட்டளைக்கு நிதியுதவி வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ்.மத்திய கல்லூரியில் புதிய வரவேற்பு வாயில்



யாழ்.மத்திய கல்லூரியில் நல்லூர் தியாகி அறக்கொடை நிலையத்தின் (TCT) உரிமையாளர் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களது அன்பளிப்பாக அமைத்துக் கொடுக்கப்பட்ட புதிய நுழைவாயில் (வரவேற்பு வாயில்) அண்மையில் திறந்து வைக்கப்பெற்றது.

## இராமநாதன் கல்லூரி மாடி கட்டடத் திறப்புவிழா









சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட இருமாடிக் கட்டடத்தின் திறப்புவிழா இம்மாதம் 12ஆம் திகதியன்று கல்லூரி அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது. இலங்கைக்கான இந்திய தூதுவர் திரு.கோபால் பாக்லே, திரு.சி.வி.கே.சிவஞானம், இந்திய துணைத் தூதுவர் திரு.எஸ் பாலச்சந்திரன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.இளங்கோவன் உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.









அளவெட்டி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் புதிதாக அமைக்கப்பட்ட ஈஸ்வரன் முன்பள்ளி, சிதம்பரக்கா சிறுவர் பூங்கா மற்றும் யாத்திரிகர் மடம் என்பன கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபூமி
சிந்தனை செய்வோம்
சிவம்-04 பூமி-01
மார்ச் 2021

## நிலங்களை வெற்றிடங்களாக விடாதீர்கள்

தமிழர் பிரதேசங்களிலுள்ள நிலங்களை பயன்பாடு உள்ளதாக மாற்றுவது காலத்தின் கட்டாயமாகும். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் எமது மக்கள் பலர் தமக்குச் சொந்தமான நிலங்களை, ஆலயச் சூழலை சரியான முறையில் பயன்படுத்தாது விடுவதனால் ஏற்பட்டிருக்கும் இடையூறுகளை அனைவரும் அறிவர். எமது மக்கள் பல லட்சம் பேர் புலம்பெயர் நாடுகளில் தஞ்சமடைந்து விட்டார்கள். அவர்களுக்கு உரித்தான நிலங்கள் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன. இத்தகைய காணிகளை அபகரிக்கும் நிலைமைகள் இப்போது அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது. வெளிநாடுகளில் வசிப்பவர்கள், தமக்குச் சொந்தமான நிலங்களை, தங்கள் உறவினர்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலாவது பயன்படுத்தக் கொடுத்தல் அவசியமாகும்.

கடந்த கால போர் நிலைமைகளுக்குப் பின்னர் பாவனை இல்லாமல் கைவிடப்பட்ட நிலங்களை, உரிமையாளர்கள் பொறுப்பேற்றுக்கொள்ளாத காரணத்தினால், இராணுவத்தினர் அவற்றை மீண்டும் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். யாழ். மாவட்டத்திலுள்ள தீவுப் பகுதிகளில் ஆயிரக் கணக்கான வீடுகள் மக்களின் பயன்பாடு இன்றி அழிந்து கொண்டிருக்கின்றன. இந்நிலை தொடருமானால், எமது மக்களின் காணிகளையும் வழிபாட்டுப் பாரம்பரிய இடங்களையும் எதிர்காலத்தில் காப்பாற்றுவது கடினமாக இருக்கும்.

வன்னி பெருநிலப் பரப்பிலும் உழவு செய்யப்படாத பலரது நிலங்கள் பற்றைகள் வளர்ந்து காடுகளாகக் காட்சியளிக்கின்றன. ஒருசிலர், வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்து தங்கள் நிலங்களை வறுமைப்பட்டவர்களுக்கு பகிர்ந்து கொடுத்திருப்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். யாழ். கஸ்தூரியார் வீதியில் பிரபல வைத்தியராகவிருந்த பசுபதி அவர்களது குடும்பத்தினர் இரணைமடு பகுதியில் உள்ள தமது ஒருபகுதி நிலத்தை வறுமைப்பட்ட குடும்பத்தவர்களுக்கு வழங்கியுள்ளனர். இராமநாதபுரத்திலுள்ள இராமநாதன் அறக்கட்டளைக்குச் சொந்தமான நிலத்தின் ஒரு பகுதியும் பொது மக்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய முயற்சிகள் பாராட்டுக்குரியது. இது விடயம் தொடர்பாக, சமூக ஆர்வலர்கள் அனைவரும் காலதாமதமின்றி அக்கறை செலுத்துதல் அவசியமாகும்.

## புதிய 20 ரூபா நாணயக் குற்றிகள்

இலங்கை மத்திய வங்கியின் எழுபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அண்மையில் வெளியிடப்பட்ட புதிய 20 ரூபா நாணயக் குற்றிகள் இம் மாதத்திலிருந்து புழக்கத்துக்கு வருகின்றன. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஸ்மன், கடந்த பெப்ரவரி மாதம் 24ஆம் திகதியன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவிடம் புதிய நாணயக் குற்றியை கையளித்திருந்தார்.







5 மில்லியன் ரூபா பெறுமதியான புதிய 20 ரூபா நாணயக் குற்றிகள் புழக்கத்துக்கு விடப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் நாணயத்தாளாக புழக்கத்திலிருந்த 20 ரூபா, இப்போது நாணயக் குற்றியாக வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## சிறப்புத் தினங்கள்

**மார்ச்**

| | | |
|---|---|---|
| 02 | செவ்வாய் | : சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 09 | செவ்வாய | : ஏகாதசி விரதம் |
| 10 | புதன் | : பிரதோஷ விரதம் |
| 11 | வியாழன் | : மஹா சிவராத்திரி |
| 13 | சனி | : அமாவாசை விரதம் |
| 15 | திங்கள் | : முதலாம் பங்குனித்திங்கள் |
| 17 | புதன் | : சதுர்த்தி விரதம் |
| 18 | வியாழன் | : கார்த்திகை விரதம் |
| 19 | வெள்ளி | : சஷ்டி விரதம் |
| 22 | திங்கள் | : இரண்டாம் பங்குனித்திங்கள் |
| 25 | வியாழன் | : ஏகாதசி விரதம் |
| 26 | வெள்ளி | : பிரதோஷ விரதம் |
| 28 | ஞாயிறு | : பூரணை விரதம் / பங்குனி உத்தரம் |
| 29 | திங்கள் | : மூன்றாம் பங்குனித்திங்கள் |
| 31 | புதன் | : சங்கடஹர சதுர்த்தி விரதம் |

**ஏப்ரல்**

| | | |
|---|---|---|
| 05 | திங்கள் | : நான்காம் பங்குனித் திங்கள் |
| 07 | புதன் | : ஏகாதசி விரதம் |
| 09 | வெள்ளி | : பிரதோஷ விரதம் |
| 11 | ஞாயிறு | : அமாவாசை விரதம் |
| 12 | திங்கள் | : ஐந்தாம் பங்குனித் திங்கள் |
| 14 | புதன் | : தமிழ் வருடப் பிறப்பு |
| 15 | வியாழன் | : கார்த்திகை விரதம் |
| 16 | வெள்ளி | : சதுர்த்தி விரதம் |
| 18 | ஞாயிறு | : சஷ்டி விரதம் |
| 23 | வெள்ளி | : ஏகாதசி விரதம் |
| 24 | சனி | : பிரதோஷ விரதம் |
| 26 | திங்கள் | : சித்திரா பூரணை விரதம், சித்திரகுப்த விரதம் |
| 30 | வெள்ளி | : சங்கடஹர சதுர்த்தி விரதம் |

## யாழ். பல்கலைக்கழக 35ஆவது பட்டமளிப்பு விழா



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொது பட்டமளிப்பு விழா கடந்த மாதம் (பெப்ரவரி) 24ஆம் 25ஆம் திகதிகளில் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் எஸ். பத்மநாதன் தலைமை தாங்கி சிறப்பித்தார். துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா உட்பட பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பல்கலைக்கழக அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மதத் தலைவர்களுடன் சுவிற்சர்லாந்து தூதுவர் சந்திப்பு



கடந்த மாதம் (பெப்ரவரி) யாழ்ப்பாணம் வந்திருந்த இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் டொமினிக் பேர்கலர் அவர்கள் நல்லை ஆதீனத்துக்கும் வருகை தந்திருந்தார்.

இதன்போது நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், இந்துக் குருமார் ஒன்றியத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள், அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், அமெரிக்கா ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் தூதுவரை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பில் வடக்கு, கிழக்குப்பகுதி தமிழ் மக்களின் தற்போதைய பிரச்சினைகள் தொடர்பாக சுவிற்சர்லாந்து தூதுவர் கேட்டறிந்தார். தமிழ் மக்களுக்கு சகல உரிமைகளும் கிடைக்க சுவிற்சர்லாந்து ஒத்துழைக்க வேண்டும் என்றும் இந்து மதத் தலைவர்கள் தூதுவரிடம் வலியுறுத்தினர்.

## பேராசிரியர் (திருமதி) சசிகலா குகமூர்த்தி பீடாதிபதியாக பதவியேற்பு



கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வித்துறை பீடாதிபதியாக பேராசிரியர் (திருமதி) சசிகலா குகமூர்த்தி இம்மாதம் 4ஆம் திகதியன்று பதவியேற்றுக் கொண்டார்.

இவர் இதுவரை காலமும் திறந்த பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், துறைத்தலைவராகவும் பதவி வகித்து வந்தார். ஏற்கனவே கொழும்பு, கொட்டாஞ்சேனை நல்லாயன் பாடசாலை, கொழும்பு விவேகானந்தா கல்லூரி, கொழும்பு பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி என்பனவற்றில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை பழைய மாணவியான இவர், பேராதனை பல்கலைக்கழக புவியியல் சிறப்புப் பட்டதாரியும், யாழ். பல்கலைக்கழக முதுதத்துவமாணியுமாவார். இந்தியா காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்றுள்ளார்.

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு தலைவாசல் கோபுரம்



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் புதிதாக தலைவாசல் கோபுரமொன்று அமைக்கப்படவிருக்கிறது. இதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் பங்குனி உத்தரநாளாகிய இம்மாதம் 28ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெறவிருக்கிறது.

யாழ். காங்கேசன்துறை பிரதான வீதியிலிருந்து அடியார்கள் ஆலயத்திற்கு வருகைதரும் முன்பக்கப் பாதையின் தொடக்கத்தில் தலைவாசல் கோபுரம் அமையவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## நகர்சேர் கடுகதி ரயிலில் 2ஆம் 3ஆம் வகுப்பு பெட்டிகள் இணைப்பு



கல்கிசையிலிருந்து காங்கேசன்துறை வரையிலான சேவையில் ஈடுபட்டு வரும் குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயிலில் இப்போது 2ஆம் 3ஆம் வகுப்பு பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. யாழ். ரயில் நிலைய பிரதம அதிபர் திரு. தி. பிரதீபன் இந்த தகவலை தெரிவித்துள்ளார்.


இதுவரை காலமும் குளிரூட்டப்பட்ட பெட்டிகளுடன் ரூபா 1,700/= கட்டணமாக அறவிடப்பட்ட நிலையில் சேவையில் ஈடுபட்டு வந்த நகர்சேர் கடுகதி ரயிலில் கடந்த மாதத்திலிருந்து சாதாரண 2ஆம் 3ஆம் வகுப்பு பெட்டிகள் இணைக்கப்பட்டிருக்கிறது. 2ஆம் வகுப்புக்கு 1000 ரூபா கட்டணமாகவும், 3ஆம் வகுப்புக்கு 700 ரூபா கட்டணமாகவும் பெறப்படுகிறது. பிரயாணிகள் ஆசனத்திற்கான முன்பதிவுகளை மேற்கொண்டு பயணம் செய்ய முடியும்.

### ஓய்வுநிலை ஆசிரியர் திரு. நந்தகுமார் மறைவு



யாழ். கொக்குவில் கிராமத்தைச் சேர்ந்த வரும் சமயத் தொண்டருமான ஓய்வுநிலை ஆசிரியர் திரு. நந்தகுமார், கடந்த ஜனவரி மாதம் காலமானார். பேராதனை பல்கலைக்கழக பட்டதாரி ஆசிரியரான இவர், கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும், பின்னர் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஒரு மடல்

அன்பார்ந்த வாசகர்களுக்கு,

வணக்கம். "சிவபூமி" செய்திப் பத்திரிகை மூன்று ஆண்டுகளை நிறைவு செய்து கொண்டு நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும்வேளையில், மீண்டும் அச்சுப் பிரதி ஊடாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காணப்படும் ஒரு சூழ்நிலையில் "சிவபூமி" பத்திரிகையை கிரமமாக வெளியிடுவதில் பல்வேறு இடையூறுகளை எதிர்நோக்க வேண்டிய நிலைமை எமக்கும் ஏற்பட்டது. இதனால் கடந்த வருடம் இடையிடையே சில இதழ்களை மின்னிதழாகவே வெளியிடவேண்டிய நிலை உருவாகியிருந்தது. இவ்வருடம் (2021) ஜனவரி மாதத்திலும் "சிவபூமி" மின்னிதழாகவே வெளிவந்தது. 2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் அறிமுகமான "சிவபூமி" பத்திரிகையின் வரலாற்றுப் பாதையில் நான்காவது ஆண்டின் முதலாவது இதழ் அச்சுப் பதிப்பாக வெளியிடுவதற்கு இறையருள் கைகூடியிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

"சிவபூமி" பத்திரிகை அச்சுப்பதிப்பாக வெளிவந்தபோது அதனை விரும்பி வாசித்த பல வாசகர்கள் தங்களுக்கு மின்னிதழ் பெற்றுக்கொள்ள முடியாமற் போய்விட்டதாகவும், அதற்கான வசதிகள் இல்லை என்றும் கவலை தெரிவித்து தொலைபேசி மற்றும் கடிதங்கள் வாயிலாக எங்களுக்கு தெரிவித்திருந்தார்கள்.

"சிவபூமி" வாசகர்களாகிய உங்கள் அனைவரினதும் ஆதங்கத்தையும் வேண்டுகோளையும் கவனத்தில் கொண்டு, மீண்டும் "சிவபூமி" பத்திரிகையை அச்சுப் பதிப்பாக வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளோம். அந்த வகையில், நான்காவது ஆண்டின் முதலாவது இதழை அச்சுப் பதிப்பாக உங்கள் கரங்களில் சமர்ப்பணம் செய்கிறோம்.

- சிவபூமி அறக்கட்டளை

## பங்குனி உத்தரம் (28.03.2021)

இந்து மக்களுக்குரிய சிறப்புத் தினங்களுள் பங்குனி உத்தரமும் ஒன்றாகும். முருகப் பெருமானுக்குரிய விரதநாளாகவே பங்குனி உத்தரம் முக்கியத்துவம் பெறுகிறது. 27 நட்சத்திரங்களுள் பன்னிரண்டாவது உத்தரம், தமிழ் மாதங்களுள் பன்னிரண்டாவது பங்குனி. இதனால் 12ஆவது மாதத்தில் வரும் 12ஆவது நட்சத்திரமான உத்தரம் ஒருவகையில் சிறப்புப் பெறுகிறது. பங்குனி உத்தரத்தையொட்டி இந்து ஆலயங்களில் பூசை, வழிபாடுகள் நடைபெற்றாலும், முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோவில்களில் சிறப்பு உற்சவங்கள் இடம்பெறுவது வழக்கம். ஆறுபடைவீடுகளுள் ஒன்றான பழனியில் பெருந்திருவிழாவுடன் தேரோட்டமும் நடைபெறுவது சிறப்புக்குரியது.

### காங்கேசன்துறையிலிருந்து இந்தியாவுக்கு விரைவில் கப்பல்சேவை

காங்கேசன்துறையிலிருந்து இந்தியாவின் காரைக்கால் வரை பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதற்கான உடன்படிக்கை புதுடில்லியில், இம்மாதம் முதலாம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

## நாவலர் நல்வாக்கு



**சிறுபிள்ளைக்கு நாவலர் பெருமான் சொல்லும் நல்வாக்குகள் இவை:**

- நமக்குச் சூரியனையும் சந்திரனையும் நட்சத்திரங்களையும் தந்தவர் கடவுள்.
- நமக்கு மழை பெய்விக்கிறவர் கடவுள்.
- காணக் கண்ணையும் கேட்கக் காதையும், மோக்க மூக்கையும், வேலை செய்யக் கையையும், நடக்கக் காலையும், நினைக்க மனசையும் நமக்குத் தந்தவர் கடவுள்
- நித்தமும் நமக்கு அன்னம், வஸ்திரம் தருகிறவர் கடவுள்.
- நாம் விழித்திருக்கும் பொழுதும் நித்திரை பண்ணும் பொழுதும் நம்மைக் காப்பாற்றுகிறவர் கடவுள்.

இப்படிப்பட்ட கடவுளை நாம் ஒரு பொழுதும் மறக்கலாகாது, எந்தநாளும் வணங்கித் துதித்தல் வேண்டும்.

(பாலபாடம் - முதற்புத்தகம்)

## சிவயோக சுவாமிகள் நற்சிந்தனை



யாழ்ப்பாணத்து மாமுனிவர் என சிறப்பித்து போற்றித் துதிக்கப்பட்டவர் தவத்திரு சிவயோக சுவாமிகள். பங்குனி மாதத்து ஆயிலியம் நட்சத்திர தினமான இம்மாதம் 25ஆம் திகதி சுவாமிகளது 57ஆவது குருபூசை தினமாகும்.

**"எக்கருமத்தை செய்யும் பொழுதும் ஊக்கத்தோடுஞ் சிரத்தையோடும் மனமகிழ்ச்சியோடுஞ் செய்து பழகுதல் வேண்டும். அப்படி செய்து பழகி வந்தால் மனவுறுதி உண்டாகும். அஃதாவது மனம் ஏகாக்கிர சித்தத்தை பொருந்தும். பொருந்தவே ஆன்மசக்தி அதிகரிக்கும். நினைத்த காரியம் நினைத்த மாத்திரத்திலே உண்டாகும். இவர் பகைவர், இவர் உறவினர் என்ற பாகுபாடு சித்தத்தில் புகுந்து கவலையை உண்டாக்காது".**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லைக் குருமணியின் குருபூசை (22.03.2021)



நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளது குருபூசை தினம் இம்மாதம் 22ஆம் திகதியாகும். இலங்கையில் முதலாவது சைவ ஆதீனமாக முக்கியத்துவம் பெறும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தை தோற்றுவித்த பெருமை இவருக்குரியது. 1966ஆம் ஆண்டு தோற்றம் பெற்ற நல்லை ஆதீனத்தின் முதலாவது குருமகா சந்நிதானமாக இவரே விளங்கினார். 1981ஆம் ஆண்டு பங்குனி மாதம் திருவாதிரை நட்சத்திர நாளன்று மகாசமாதியானார்.

## மூத்த எழுத்தாளர் டொமினிக் ஜீவா மறைவு



ஈழத்து மூத்த எழுத்தாளரான திரு. டொமினிக் ஜீவா, கடந்த ஜனவரி மாதம் 28ஆம் திகதியன்று தனது 94ஆவது வயதில் காலமானார். ஈழத்து இலக்கிய ரசிகர்களால் "மல்லிகை ஜீவா" என அழைக்கப்பட்டு வந்த இவர், ஈழத்து எழுத்துலக வரலாற்றில் அறுபது வருடங்களுக்கும் மேலாக எழுத்துப் பணியாற்றி சாதனை படைத்தவர். "மல்லிகை" என்ற பெயரில் மாதாந்த சஞ்சிகையொன்றை 46 வருடங்களாக வெளியிட்டு வந்த பெருமைக்குரியவர். இதன் ஊடாக ஈழத்து இலக்கிய உலகில் அழியாத தடம் பதித்திருப்பதை சிறப்பாகச் சொல்லலாம்.

திரு. டொமினிக் ஜீவா எழுத்தாளர் என்பதற்கும் மேலாக, ஒரு பொதுவுடமைவாதி, சிறந்த பேச்சாளர், சீர்திருத்தவாதி, சஞ்சிகை ஆசிரியர், நூலாசிரியர் என பல பரிமாணங்களில் செயற்பட்டு உயர்ந்தவர். இலக்கியப் படைப்பாளர்களுக்கு வழங்கப்படும் சாஹித்திய மண்டலப் பரிசை, முதன் முதலாகப் பெற்றுக் கொண்ட பெருமைக்குரியவர் இவர். 1960ஆம் ஆண்டு "தண்ணீரும் கண்ணீரும்" என்ற சிறுகதைத் தொகுதிக்கு மேற்படி பரிசு வழங்கப்பட்டது. பின்னாளில், இந்த நூல் மதுரை காமராஜர் பல்கலைக்கழக எம்.ஏ. பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

இவர், தனது எழுத்துப் பணிக்காக ஏராளமான விருதுகளைப் பெற்றுள்ளார். இலங்கை அரசின் மிக உயர்ந்த இலக்கிய விருதான "சாஹித்திய இரத்தினா" 2005ஆம் ஆண்டு ஜீவாவுக்கு கிடைத்தது. மறைந்த எழுத்தாளர் ஜீவாவின் எழுத்துப் பணியை கௌரவிக்கும் வகையில் ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் வெளிவந்த சிறுகதையை "சிவபூமி" மறுபிரசுரம் செய்கிறது.

## கொரோனா வைரஸ் தொற்றுக்கான தடுப்பூசி ஏற்றும் பணி தொடருகிறது

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்கும் வகையில் இந்திய அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்பட்ட அஸ்ட்ரா ஜெனகா தடுப்பூசி ஏற்றும் பணிகள் கடந்த ஜனவரி மாதம் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு, இப்பொழுது நாடளாவிய ரீதியில் வெற்றிகரமாக இடம்பெற்று வருகிறது. கொழும்பு ஐ.டி.எச் வைத்தியசாலையிலேயே முதலாவதாக தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பமானது. விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம அவர்களுக்கு முதல் தடுப்பூசி ஏற்றப்பட்டது. அதேதினம் கொழும்பு இராணுவ வைத்தியசாலையிலும் தடுப்பூசி நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

இந்த வகையில் முதல்நாளில் (ஜனவரி 29ஆம் திகதி) மட்டும் மேல் மாகாணத்தில் 2280 சுகாதார அதிகாரிகள் உள்ளிட்ட 2430 பேருக்கு அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் தடுப்பூசி ஏற்றும் பணி, ஜனவரி 30ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய தினம் மொத்தமாக 2997 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி யாழ். மாவட்டத்தில் 1586 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் 448 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் 360 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 313 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 290 பேருக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

இப்பொழுது நாடு முழுவதும் தடுப்பூசி ஏற்றும் பணி வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இம்மாதம் 20ஆம் திகதிவரை 8,25,000க்கும் அதிகமானோர் தடுப்பூசியை பெற்றுக் கொண்டதாக சுகாதாரப் பகுதியின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனா வைரஸ் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிக்கிறது

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை உலகளாவிய ரீதியில் மட்டுமல்ல, இலங்கையிலும் நாளாந்தம் அதிகரித்து வருவது பெரிதும் கவலையளிக்கும் வகையில் இருப்பதாக ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

உலகில் பாதிக்கப்பட்டோரின் தொகை 12 கோடிக்கும் அதிகமாகிவிட்டது. உயிரிழந்தவர்கள் தொகையும் 27 லட்சத்தைக் கடந்து விட்டது.

இலங்கையிலும் இப்போது பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 90 ஆயிரத்தையும் கடந்துவிட்டதுடன், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 500க்கும் மேலாகிவிட்டது.

வடபகுதியிலும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்ற தகவலை வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வை மேன்மைப்படுத்தும் மகாசிவராத்திரி விரதம்

த.மனோகரன்

மனிதப் பண்புகளை தட்டியெழுப்பி நேரிய வழியில் வாழ்க்கையை அமைத்து உயர்நிலையை அடைவதற்கு மனிதனைப் பக்குவப்படுத்துவதே சமய நெறிகள். இந்த வகையில் இந்து சமயம் பல்வேறு நெறிமுறைகளை முன்வைத்துள்ளது. அவற்றிலே விரதங்களும் அடங்குகின்றன. இவ்விரதங்கள் சக்தி விரதங்கள், விநாயக விரதங்கள், திருமாலுக்குரிய விரதங்கள், முருகனுக்குரிய விரதங்கள், நவக்கிரகங்களுக்குரிய விரதங்கள் எனப் பல வழிகளில் இந்து சமயத்தவரால் கடைப்பிடிக்கப்படுகின்றன.

இந்த வகையிலே சிவனுக்குரிய விரதமான மகா சிவராத்திரி மேன்மை பொருந்தியதாக அமைகின்றது.

மாதந்தோறும் அமாவாசையுடன் கூடிவரும் நாள் சிவராத்திரியாக கைக்கொள்ளப்படும் போதும் மாசி மாத அமாவாசையுடன் கூடி வரும் சிவராத்திரி மகா சிவராத்திரி என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

சிவராத்திரி தொடர்பாகப் பல கதைகளும் உள்ளன. பிரம்மாவுக்கும், திருமாலுக்கும் இடையே சோதிப் பிளம்பாகத் தோன்றி தனது அளப்பரிய ஆற்றலை வெளிப்படுத்திய நாளாகவும் அவர்களது ஆணவத்தை அழித்த நாளாகவும் இந்நாள் கூறப்படுகின்றது. இதுபோன்ற பல புராணக் கதைகளும் உள்ளன.

இக்கதைகள் கூறும் தத்துவக் கருத்துக்களைப் புரிந்து, உணர்ந்து கொள்வதே விரதம் நோற்பதன் பயனாக அமையுமேயன்றி சம்பிரதாய சடங்குகளை மட்டும் கைக்கொள்வதால் பயனில்லை.

மனதைப் பக்குவப்படுத்தி நேரிய வழியில் வாழ்ந்து நாம் பெற்ற பிறவிப் பயனை அடைவதற்கான வழியை அருட்திரு இராமலிங்க வள்ளலார் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

அதுவே இன்று மகா சிவராத்திரி விரதத்தின் மூல மந்திரமாக விளங்குகின்றது. "தனித்திரு, பசித்திரு, விழித்திரு" என்பவையே அவையாகும். ஒரு மனிதன் இம்மூன்று விதிகளையும் தெளிவாக உணர்ந்து தினமும் கைக்கொள்வானாயின் அவன் மனிதருள் தெய்வமாக உயர முடியும்.

ஆம்! இந்த மூன்று வழிகளும் மனித மனதை பக்குவப்படுத்தி, வாழும் வழியை நெறிப்படுத்தும் ஆற்றல் கொண்டவை. இவற்றிற்கு மேலோட்டமாக ஒரு கருத்தும் கொள்ளப்படுவது வழக்கம். இருப்பினும் ஆழமாக ஆராய்ந்து அவற்றினுள் பொதிந்துள்ள தத்துவக் கருத்துக்களைக் கைக்கொள்வதே மகா சிவராத்திரி விரதம் கடைப்பிடிப்பதன் பயனாக அமையும்.

சம்பிரதாய சடங்குகள் மட்டுமே சமயம் என்று கருதிவிடக் கூடாது. மனிதனை, மனிதனின் மனத்தைப் பக்குவப்படுத்துவதே சமய வாழ்வாகும். 'தனித்திரு' எனும் போது தனியாக ஒதுங்கிருப்பது என்பது கருத்தல்ல. நல்லவற்றையே நோக்காகக் கொண்டு சிந்தித்து, செயற்பட்டு தனது உயர்ந்த தனித்துவத்தைப் பேணுதல் வேண்டும் என்பதே தனித்திரு என்பதன் பொருளாக அமைகின்றது.

'பசித்திரு' என்னும் போது உணவைச் சில வேளைகள் கைவிட்டு இருப்பது என்பது அல்ல. உணவைக் குறைப்பதால் உடல் நலம் பேணப்படும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. உடல் நலத்தைப் பேண உணவைத் தவிர்த்து பசித்திருப்பது போல மன நலத்தைப் பேணவும் பசித்திருக்க வேண்டும்.



அதாவது வயிறு பசித்திருக்கும் போது நல்ல உணவைத் தேடுவது போன்று உள்ளப் பசிக்கு அதாவது, அறிவுப் பசிக்கு நல்லவற்றை தேடி அறிந்து அதன் மூலம் மனப்பசியைப் போக்கிக் கொள்ள வேண்டும்.

உடலிலுள்ள கழிவுகளை அகற்றுவதில் நாம் முன்னுரிமை தந்து செயற்படுவது போன்று உள்ளத்திலே புகுந்துள்ள தீய சிந்தனைகளான ஆசை, பொறாமை, கோபம், குரோதம், வெறுப்பு, பகை, ஆணவம், அகங்காரம், மோகம் போன்ற கழிவுகளை நீக்கி, வெளியேற்றி சுத்தம் செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு மனக் கழிவுகளை வெளியேற்றிவிடும் போது ஏற்படும் வெற்றிடமே மனப்பசி எனப்படுகின்றது. அந்த மனப்பசியை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே பசித்திரு என்பதன் பொருளாக அமைகின்றது.மனப்பசிக்கு உணவாக நல்ல சிந்தனைகளை உள்வாங்கிக் கொள்வது மனித வாழ்வின் மகத்துவமாகின்றது. அதுவே வாழ வேண்டிய சமய நெறியில் வாழ வழிவகுப்பதற்குரிய படிமுறையாகின்றது.

கண்களை மூடாது, நித்திரை கொள்ளாது விழித்திருப்பது தான் மகா சிவராத்திரியின் "விழித்திரு" என்ற ஞானப்பதத்தின் பொருளாகக் கொள்ளக் கூடாது. விழித்திரு எனும் போது அதுவும் ஒரு விளக்கமாக அமைந்த போதும் சிவராத்திரி கூறும் "விழித்திரு" என்பதன் விரிவான பொருள் வேறொன்றும் உள்ளது. அதாவது தீய நோக்கங்கள், சிந்தனைகள் நம்மனத்தில் புகாதபடி நாம் விழிப்பாயிருக்க வேண்டும் என்பதே ஆகும். மனிதனின் சிந்தனையை சிதைத்து வாழ்வை துன்பத்தில் ஆழ்த்துபவை தீய சிந்தனைகள், தீய நோக்கங்கள், தீய செயற்பாடுகள் என்பன ஆகும். இத்தீய சக்திகளை கட்டுப்படுத்தி, தூர விலக்கி விட விழிப்பாயிருக்க வேண்டும். மனிதனின் நேர்மையான வாழ்விற்கு தடையாக இருப்பவை இனங்காணப்பட வேண்டும். அவை மனத்திலே புகாதிருக்க வேண்டும். அதற்காக ஒவ்வொருவரும் விழிப்பாயிருப்பதையே "விழித்திரு" என்ற பதம் விளக்குகின்றது.

ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தான் மேன்மைப்படுத்திக் கொள்ள வழியமைத்து தருபவை சமயங்கள் விதித்துள்ள விரதங்கள் என்பதை நாம் புரிந்து கொண்டு வாழ்வை செப்பனிட்டுக் கொண்டால் துன்ப, துயரங்களிலிருந்து விடுபட முடியும்.

ஆணவம், இறுமாப்பு, அகங்காரம், குரோதம், பகைமை போன்ற மனித குல நலனுக்கு ஒவ்வாத குணங்களுடன் வாழ்வதை ஒரு வாழ்வாகக் கொள்ள முடியாது. தானும் சிறப்பான வாழ்வு வாழ்ந்து, ஏனையோரும் அவ்வாறு வாழ வழிவகுப்பதே சமய வாழ்வாகும். விரதங்கள் நோற்பதன் மூலம் துன்பங்கள் களையப்பட்டு தூய்மையான வாழ்வு வந்து சேரும் என்பது நமது மரபு வழியாக வரும் நம்பிக்கையாகும்.

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவர் குருபூசை (28.02.2021)

# எல்லா உயிரும் இன்புற்றிருக்க திருவள்ளுவர் காட்டும் வழி

- கலாபூஷணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை-

வள்ளுவப் பெருமான் இந்த உலகம் நல்லபடி வாழ வேண்டும், எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடனே திருக்குறளைப் படைத்தார். அதனால்தான் உலகினர் எல்லோருமே திருக்குறளைப் போற்றுகின்றனர்.

திருக்குறளைப் படிப்பவர்கள் எப்படிப் படிக்க வேண்டும். படித்த பின் என்ன செய்ய வேண்டும். என்பதையும் சொல்லாமற் சொல்லியுள்ளார். கற்றல் பற்றிச் சொல்லும் போது கற்க, கசடறக் கற்க, கற்பவை கற்க, கற்றபின் அதற்குத்தக நிற்க என்று சொல்கின்றார். இதன்மூலம் உலக நன்மை கருதி அவர் தந்த திருக்குறளை நாம் கற்க வேண்டும். அதை, கசடற அதாவது சந்தேக விபரீதம் அறத் தெளிவாகக் கற்க வேண்டும். அவ்விதம் கற்க வேண்டிய முறையில் நல்லாசிரியரிடம் கற்றபின், அதற்குத்தக, கற்றதற்குத்தக நிற்க வேண்டும். கற்றபடி வாழ வேண்டும் என நாம் தெளிந்து கொள்ள வேண்டும்.

இதன் மூலம் ஏனைய இலக்கியங்களைப் போன்று இலக்கிய இன்பம் பெறுவதற்கும், பேசுவதற்கும், எழுதுவதற்கும் மட்டுமல்லாது அதன்படி வாழ்வதற்காகக் கற்க வேண்டும். அதனால் தான் பெரியோர்கள் திருக்குறளை ஒரு வாழ்வியல் நூல் எனக் கூறுகின்றார்கள்.

வள்ளுவர் உலக உயிர்களின் நன்மை கருதித் திருக்குறளைப் படைத்தார் என்னும் போது இதனைப் படிப்போரும், அவர்கள் மூலமாகப் படிப்பறிவில்லா மக்களும் மற்றும் பகுத்தறிவு இல்லாத உயிரினங்களும் நன்மை பெறவேண்டும் என்பதே நோக்கம் எனக் கொள்ளலாம்.

ஆன்மீகவாதிகள் முதல் சோஸலிச வாதிகள் வரை, ஆஸ்திகர் முதல் நாஸ்திகர் வரை, சமய வாதிகள் முதல் அரசியல்வாதிகள் வரை எல்லோருமே எல்லா உயிரினங்களும் இன்புற்றிருக்க வேண்டுமென்றே கூறுவர். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

பாரதியார் "தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்"என்பார். திருமூலர் இதையே "யாவர்க்கும் ஆம் உண்ணும்போதொரு கைப்பிடி" என்பார். கந்தபுராணம் "குறைவிலாது உயிர்கள் வாழ்க" என்கிறது. இக்காலச் சினிமாப் பாடல் "எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்கிறது. இப்படி எங்கு பார்த்தாலும் "எல்லாரும் இன்புற்று இருக்க வேண்டும்" என்ற கொள்கை போற்றப்படுவதைக் காண்கின்றோம். அப்படியானால், இதில் திருக்குறளைப் படிக்கும் எங்களின் பங்கு என்ன என்று சிந்திக்க வேண்டியுள்ளது. வள்ளுவர் இதில் எங்களின் பங்கு என்ன என்பதை இரண்டு வகைப்படுத்துகின்றார். ஒன்று செய்தல்.மற்றையது செய்யாமல் விடுதல். எதைச் செய்தல் வேண்டும் எதைச் செய்யாமல் விட வேண்டும் என்பதையும் அவரே அறுதியிட்டுச் சொல்கின்றார்.

தர்க்க ரீதியாக எங்களைப் பார்த்துக் கேட்கின்றார். நீ அறிவுடையவனா? அறிவீனனா என்பதைப் பின்வரும் அளவு கொண்டு அறிந்து கொள். பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தை உனக்கு வந்த துன்பமாகக் கருதுவாயானால் நீ அறிவுடையவன். அப்படியில்லையென்றால் உன் அறிவால் பயனில்லை, நீ அறிவற்றவன்.

**அறிவினா னாகுவ துண்டோ பிறதினோய்**
**தந்நோய் போற் போற்றாக் கடை.**

என்பது குறள்.

ஆகவே பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தை எமக்கு வந்த துன்பமாகக் கருத வேண்டும் என்பதன் மூலம் நாம் செய்ய வேண்டியது. எமக்கு வந்த துன்பத்தைப் போக்குவது போலப் பிற உயிர்களுக்கு வந்த துன்பத்தையும் போக்க வேண்டும். இதன் மூலம் நாம் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் வாழ வேண்டும் என்பதும் சொல்லப்படுகின்றது.

இதனையே மேலும் விரிவாக்கம் செய்து பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் வேண்டும் என்கிறார். பசித்துன்பம் தான் உயிர்களுக்கு என்றும் உள்ள கொடிய துன்பம். அதைப் போக்குவதற்கு நீ செய்யக் கூடியது உன் தேட்டத்தைப் பகுத்து இல்லாதோர்க்கும் கொடுத்து பல உயிர்களையும் பாதுகாத்தல் வேண்டும்.

**பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்று ளெல்லாந் தலை.**

என்னும் குறள் மூலம் அறிஞர் கூறிய எல்லா அறங்களிலும் மேலானது "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" என்கின்றார். எனவே நாம் செய்ய வேண்டுவன பிற உயிர்க்கு வரும் துன்பத்தை நமது துன்பம் போல மதித்து அவற்றைக் காத்தல். அதற்காகச் செய்ய வேண்டியது பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்பதையுணர்ந்து அதன்படி செய்து வாழ வேண்டும்.

அடுத்து நீ சிலவற்றைச் செய்யாது விடுவதாலும் எல்லா உயிரும் இன்புற்றிருக்க உதவலாம் என்கின்றார். அது உனக்கும் பிற உயிர்க்கும் நன்மை தரும். உன்னில் நீ அன்புடையவனானால் தீயது எதையும் செய்யாததே. தீயதைச் செய்தால் உனக்குக் கேடுவரும். உன்னால் பிறர்க்கும் கேடுவரும்.

**தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றுந்**
**துன்னற்க தீவினைப் பால்.**

என்பது குறள். எனவே தீயன செய்யாதிருப்பதன் மூலம் பிற உயிர்கள் இன்புற்றிருக்க உதவலாம் என உணர்த்துகின்றார்.

தீயதைச் செய்யாதிருத்தல் மூலம் உயிர்கள் இன்புறுவது மட்டுமல்ல அவையெல்லாம் எம்மைக் கை கூப்பித் தொழும் எனும் உச்ச நிலையையும் காட்டுகின்றார். உலகிலுள்ள உயிர்கள் எல்லாம் கைகூப்பித் தொழுவதை யார்தான் விரும்பமாட்டார்கள். அதற்காக நீ செய்வதல்ல செய்யாமல் விடவேண்டியவை இரண்டு. ஒன்று பிற உயிர்களைக் கொல்லாமல் விடுதல்' மற்றையது கொன்ற

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பித்தல் – கற்றல் செயன்முறையின் விளைதிறனை மேம்படுத்துவதில் குழு உளவியலின் பங்களிப்பு

பேராசிரியர் (திருமதி) சசிகலா குகமூர்த்தி,
பீடாதிபதி - கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## முன்னுரை

மனிதன் இயல்பாகவே சமூகப்பற்றுடையவன். பிறருடன் சேர்ந்து வாழ வேண்டுமென்ற விருப்பம் இயற்கையாகவே மனிதனிடம் அமைந்ததொன்றாகும். இயற்கையாக மட்டுமல்லாது கூடி வாழ வேண்டுமென்ற விருப்பம் அனுபவத்தினாலும் எழுகின்றது. பொதுவாக மனிதன் தனது சமூக அடையாளத்தை பேணும் வகையில் குழு நடத்தைகளில் ஈடுபட்டு சமூகத்தில் தனது நடத்தைகளைப் பலப்படுத்திக்கொள்கின்றான். இதன் விளைவாக மனித வாழ்வில் குழு நடத்தைகள் முக்கியம் பெறுகின்றன. குழுவாக இயங்குவதற்கு அடிப்படையாக அமைவது மனிதனிடம் இயல்பாகக் காணப்படும் குழுவுணர்வும் குழுமனப்பாங்குமே காரணமாகும்.

மனிதன் பிறருடன் சேர்ந்து குழுவாக இயங்க முற்படுகின்றபொழுது அவனது நடத்தைகளில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக ஏற்படலாம். மனித நடத்தையை விளக்கும் உளவியல் மனிதனது கூட்டு நடத்தை பற்றியும் ஆராய முற்படுகின்றது. ஒரு தனிமனிதனின் சிந்தனை, உணர்ச்சி, செயல்கள் என்பனவெல்லாம் ஒரு குழுவின் உறுப்பினர்களாக செயற்படுகின்றபொழுது மாற்றமடைகின்றன. பொதுவாகத் தனிமனிதனாக இருக்கும்போது செய்யாத, செய்யத் துணியாத பல செயல்களை குழுவாகச் செயற்படும்பொழுது மனிதன் செய்வதை அனுபவத்தில் கண்டுள்ளோம். கல்விப்புலத்திலும் மாணவர்களின் ஆற்றல்களை மேம்படையச் செய்வதில் குழுச் செயற்பாடுகள் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. இந்த வகையில் ஆசிரியர்கள் மாணவர்களின் கற்பித்தல் - கற்றல் செயன்முறையிலே குழுச் செயற்பாடுகளை விளைதிறன்மிக்க முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு குழு உளவியல் தொடர்பான விளக்கம் அவசியமானதாகும்.

## குழு மனம்

உளவியலிலே குழுக்களின் மனப் போக்குகளையும் நடத்தைகளையும் விவரித்து விளக்கும் உளவியல் "குழு மனவியல்" அல்லது "குழு உளவியல்" (Group Psychology) எனக் குறிப்பிடப்படுகின்றது. குழு உளவியலானது குழுக்களின் உருவாக்கத்திற்கான உளவியல் அடிப்படைகள், குழு நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் உளவியல்சார் காரணிகள், குழு நடத்தைகளை விளங்கிக்கொள்வதற்கான அணுகுமுறைகள் போன்ற பல விடயங்களை ஆராய்கின்றது.

குழு என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒன்றுகூடி ஒரு பொதுநோக்கத்தின் அடிப்படையில் செயற்படும் ஒரு அமைப்பு எனலாம். குழுவில் இடம்பெற்ற ஒவ்வொருவரதும் நடத்தைகள் ஏனையோர் மீது செல்வாக்குச் செலுத்துவதும் ஒருவர் ஏனையோரின் நடத்தையின் செல்வாக்கிற்கு உட்படுவதும் குழுச் செயற்பாட்டில் காணப்படும் ஒரு முக்கிய இயல்பாகும்.

பிசெல்மான் (Fishelman, 1998) மக்டூகலினால் முன்வைக்கப்பட்ட குழு மனம்பற்றிக் குறிப்பிடுகின்றார். மக்டூகல் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் "மனம்" என்ற ஒன்று உள்ளது போன்று குழுக்களுக்கும் "குழு மனம்" (Group mind) என்ற ஒன்று உண்டு என்றும் தனிமனிதன் எவ்வாறு தனது மனத்தின் அடிப்படையில் செயற்படுகின்றானோ அதேபோன்று குழுக்களின் நடத்தைக்கும் குழுமனம் அடிப்படையாக உள்ளதெனவும் குறிப்பிடுகின்றார்.

குழுமனம் செயற்படுவதற்கு நான்கு அடிப்படை ஆக்கநிலைகள் (Underlying Conditions) இருத்தல் வேண்டுமென மக்டூகல் குறிப்பிடுகின்றார்.

1. சிறிது காலமேனும் தொடர்ச்சியாக குறித்ததொரு குழு நிலைத்து இருத்தல்.
2. குறித்த குழுவினைச் சேர்ந்தவன் நான் என்னும் உணர்வு உறுப்பினர்களிடம் இருத்தல்.
3. குழு உறுப்பினர்களிடையே சுதந்திரமான கருத்துப் பரிமாற்றத்திற்கு சந்தர்ப்பம் இருத்தல்.
4. குழு நடத்தைக்கான சில மரபுகள் / விதிமுறைகள் என்பன குறித்த குழுவினால் உருவாக்கப்பட்டு இருத்தல்.

தற்கால உளவியலாளர்கள் குறிப்பாக சமூக உளவியலாளர்கள் குழுமனம் என்பதைக் காட்டிலும் "குழுக்களது இயக்க சக்தி" (Group Dynamics) க்கு முக்கியத்துவம் கொடுத்து ஆராய்கின்றனர்.

## குழு இயக்கவியலும் கற்பித்தல்-கற்றல் செயன்முறையில் அதன் பயன்பாடும்.

சமூக உளவியலிலே குழு இயக்கவியல் என்ற எண்ணக்கரு முக்கியமானதாகும். குழு இயக்கவியல் தொடர்பான ஆய்வுகள் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரே முக்கியத்துவம் பெற்றது. குழு இயக்கவியல் என்பது குழு உளவியலின் ஒரு முக்கிய அம்சமாகும். குழு இயக்கவியலானது குழுக்கள் எவ்வாறு தோன்றுகின்றன. குழுக்கள் வளர்ச்சி அடைவதற்கு தேவையான நிலைமைகள் என்ன, குழுக்கள் நன்கு இயங்குவதற்கு தேவைப்படும் சூழ்நிலைகள் யாவை குழுக்கள் எவ்வாறு தனிமனித நடத்தையைப் பாதிக்கின்றன என்ற வகையில் ஆய்வு செய்ய முற்படுகின்றது. குழு இயக்கவியல் தொடர்பான ஆய்வுகள் வெவ்வேறு சமூகச் சூழ்நிலைகளில் மாறுதலடைகின்ற மனித நடத்தைகளையும் குழுவில் காணப்படும் சமூகத் தொடர்புகளையும் புரிந்துகொள்ள வழி செய்கின்றது.

தனி மனிதர்கள் ஒரு குழுவினுள் அங்கத்துவம் பெற்று இயங்குகின்றபொழுது அவர்களது நடத்தையில் தனித்துவம் (Individuality) என்ற குணவியல்பு குறைந்து வருகின்றதொரு போக்கினை அவதானிக்கலாம். இம்மாற்றம் அவசியமானதாகும். காரணம் தனிமனிதர்கள் தனித்து நின்று செயற்படாது என்ன நோக்கத்திற்காக குறிப்பிட்டதொரு குழு உருவானதோ அந்நோக்கத்தை அடையும் வகையில் செயற்பட்டு, பொதுநலன் நோக்கிய செயற்திட்டங்கள் வெற்றிபெறுவதற்கு குழு இயக்கவியல் உறுதுணையாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் பொதுநலன் கருதி அமைக்கப்படும் குழுக்கள் பின்வரும் இயல்புகளை உடையதாகச் செயற்படுதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1.குழுவில் உள்ள அனைவரும் பொதுநோக்கம் அல்லது இலட்சியத்தை அடையும் வகையில் செயற்படல்.
2.ஒத்த மனப்பான்மையும் நடத்தைகளும் காணப்படல்.
3.குழு உறுப்பினர்கள் அனைவரும் குழுவின் மரபுகள், இலட்சியங்களை மதித்து நடத்தல்.
4.உறுப்பினர் ஒருவரின் தேவையை குழுவின் பிற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தத்தம் தேவையைப் போன்று எண்ணிச் செயற்படல்.
5.குழுவில் உள்ளோர் அனைவரும் ஒருவரோடு ஒருவர் நெருங்கிய தொடர்புகொண்டு ஒத்த கருத்துடன் செயற்படுதல்.
6.குழு உறுப்பினர்களிடையே ஈடுபாடு, நம்பிக்கை, பரிவு ஆகியவை தோன்றுதல். இதனால் குழுவில் உள்ளோர் ஏனைய உறுப்பினர்களிடம் ஆலோசனை பெறவும், அவர்களைப் பின்பற்றி நடக்கவும் முற்படுதல்.
7.குழுவின் நடத்தையும் இயல்பும் குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களிடமும் பரவிக் காணப்படுதல்.
8.குழு உறுப்பினர்களிடையே காணப்படும் தொடர்பு உளவியல் அடிப்படையில் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தல்.

குழுவாகச் செயற்படுகின்றபொழுது மேற்குறித்த குணவியல்புகள் வளர்வதற்கு சந்தர்ப்பங்கள் கிடைப்பதினால் பாடசாலை நிர்வாகத்தினர், ஆசிரியர் ஆகியோர் மாணவர்களிடையே குழு நடத்தைகளை ஊக்குவித்து அவர்களது அறிவு, திறன், மனப்பாங்குகளை குழு செயற்பாடுகளின் மூலம் விருத்தி செய்வதற்கு முனைதல் வேண்டும். தனி மனிதர்களிடம் காணப்படும் வேற்றுமைகளில் ஒற்றுமை காண்பதற்கு குழு நடத்தையும் அதனால் வளர்கின்ற குழு உளவியல்சார் நடத்தைகளும் பக்கபலமாக அமைகின்றன.

குழுச் செயற்பாடுகளை வழிநடத்தும் ஆசிரியர்கள் பின்வரும் பிரச்சினைகள் ஏற்படாத வகையில் தமது மேற்பார்வையை குழுவின் மீது செலுத்துதல் வேண்டும். குழுச் செயற்பாட்டின்பொழுது பின்வரும் குறைபாடுகள் ஏற்படல் தவிர்க்கப்படல் வேண்டும்:

- நிலையற்ற தன்மை.
- வலுவுணர்ச்சியும் பொறுப்பற்ற நடத்தையும்.
- உணர்ச்சிவயப்படுத்தலும் அறிவுபூர்வமான சிந்தனை குறைந்து காணப்படுதலும்.
- கருத்தேற்றத் தன்மை மிகுந்து காணப்படுதல்
- குறைந்த சகிப்புத்தன்மை.
- ஓர் உறுப்பினரின் தூண்டலின் விளைவாக மற்றொருவரின் நடத்தை பாதிக்கப்படல்.

ஒரு ஜனநாயக நாட்டிலே குறிப்பாக பன்மைக் கலாசாரத்தை கொண்டுள்ள நாடுகளில் ஏனைய இனக்குழுக்களின் சமூக நெறிகளை அறிந்து ஏனையவர்களுடன் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக வாழ்வதற்கான சமூகத்திறன்களை உருவாக்க குழு இயக்கவியலை பயன்படுத்துவது சிறந்ததொரு உபாயமாகும்.

கல்விச் செயற்பாடுகளில் குழு இயக்கவியல் பயன்பாடும் முக்கியத்துவமும் பின்வருமாறு அமைகின்றது:

- மாணவர்களை ஜனநாயக முறையில் செயல்படுத்துவதற்கு ஊக்குவிக்கின்றது.
- தனித்து இயங்குவதைவிட குழுவாக இயங்குகின்ற பொழுது மாணவர்களின் தேர்ச்சி, அடைவுமட்டங்கள் அதிகரிக்கின்றன.
- கற்றல் செயற்பாடுகளில் குழுவாக இயங்குகின்ற பொழுது மாணவர்களிடையே கூட்டுணர்வு அதிகரித்து கற்றலுக்கான சிறந்ததொரு கவின்நிலையான சூழல் உருவாகின்றது.
- ஆசிரியர், மாணவர், நிர்வாக அங்கத்தவரிடையே குழுவுணர்ச்சியை (Corporate Spirit) வளர்க்கின்றது.
- பல்வேறு பொறுப்புகளை இலகுவாக நிறைவேற்ற உதவுகின்றது.
- உள்ளடங்கள்சார் கல்விச் (Inclusive Education) செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவுகின்றது.

ஆசிரியர் ஒருவர் குழு இயக்கவியலை கற்பித்தல் கற்றல் செயன்முறையில் பயன்படுத்துகின்ற அதேநேரம் ஒவ்வொரு மாணவரினதும் தனித்திறமைகளையும் ஆர்வங்களையும் கவனத்தில் எடுத்தல் முக்கியமானதாகும். இதனால் குழு நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் தொடர்பான விளக்கம் ஆசிரியர்களுக்கு அவசியமானதாகும்.

**குழு நடத்தையில் தாக்கம் செலுத்தும் காரணிகள்**

மாணவரது தனிப்பட்ட நடத்தையில் எவ்வாறு உளவியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றதோ அதேபோன்று ஒரு குழுவினது நடத்தையிலும் பல்வேறு சமூக, உளவியல் காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. குழுத் தலைவர், குழு உறுப்பினர்கள் ஆகியோரது இயல்புகள், குழுவின் பொதுநோக்கம், இலட்சியம், குழு செயற்படும் சூழ்நிலை என்பன ஒரு குழுவின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

குழு உளவியல் குழுவினது நடத்தையை உருவாக்குவதில் ஒத்துணர்வு அல்லது பரிவு (Sympathy) கருத்தேற்றம் (Suggestion) பார்த்துச் செய்தல் அல்லது பின்பற்றல் (Imitation) ஆகிய உளவியல் சக்திகள் தாக்கம் செலுத்துவதாகக் குறிப்பிடுகின்றது. இம்மூன்று உளவியல் சக்திகளையும், உளவியலாளர்கள் "பொதுப்போக்குகள்" (General Tendencies) எனக் குறிப்பிடுகின்றனர். இப்பொதுப் போக்குகள் இயல்பூக்க நடத்தைகளில் இருந்து மாறுபட்டவை. இயல்பூக்க நடத்தைகளைப்போன்று அல்லாமல் பொதுப்போக்கு நடத்தைகள் நிலைமைக்குத் தக்கவாறு மாறுபாடு அடைந்தும் வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறான மனவெழுச்சிகளுடனும் தொடர்புகொண்டும் காணப்படுகின்றன. இதனால் குழு நடத்தைகளைக் கண்காணிக்கும் ஆசிரியர் குழுக்களினது பொதுப்போக்கு நடத்தைகளை அவதானித்து குழுக்கள் பிழையான வழியில் செயற்படாது இருப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்தேற்றம்**

குழு நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் பொதுப்போக்குகளில் கருத்தேற்றம் என்ற உளவியல் சக்தி குழுக்களது நடத்தையின் போக்கினைத் தீர்மானிக்கின்ற ஒரு வலுவான காரணியாக அமைகின்றது. கருத்தேற்றம் என்பது ஒரு நுட்பமான உளச் செயன்முறையாகும். பிறருடைய கருத்துகள், எண்ணங்களை நம்மையறியாமல் நாம் ஏற்றுக்கொள்ளுதல் கருத்தேற்றம் எனப்படும். கருத்தேற்றத்தில் தற்கருத்தேற்றம், எதிர்மறைக்கருத்தேற்றம், எதிர்கருத்தேற்றம், மதிப்புக்கருத்தேற்றம் என கருத்தேற்ற செயன்முறைகள் பல வகைகளில் ஏற்படலாம்.

கருத்தேற்றம் என்பது கற்பித்தலில் இன்றியமையாத ஒரு செயன்முறையாகும். பொதுவாக ஆசிரியர்கள் கூறும் கருத்துகளை மாணவர்கள் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்வார்கள். கற்பித்தல்-கற்றல் செயன்முறையில் கருத்தேற்றத்தினை ஆசிரியர் ஒருவர் விளைதிறனான முறையில் பயன்படுத்தல் வேண்டும். திறன்மிக்க ஆசிரியர் ஒருவர் தான் கற்பிக்கும் பாடம்சார்ந்த விடயங்களை மாணவர் மனதில் பதியச்செய்கின்ற செயற்பாட்டுடன் மட்டும் நிறுத்திவிடாது மாணவர்கள் அப்பாடத்தை நன்கு ஆராய்ந்து தாமாகவே கற்கும் முறைகளையும் கருத்தேற்றத்தின் மூலம் அவர்களின் மனதில் அமையும்படி செய்தல் வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களிடம் விளைதிறனான முறையில் கருத்தேற்றத்தினை உருவாக்குவதற்காக பின்வரும் உபாயங்களை ஆசிரியர் பயன்படுத்தலாம்.

- ஆசிரியர் தான் கூறும் கருத்துகளுக்கேற்ற முன்மாதிரியாக நடத்தல்.
- ஆசிரியர் தான் கூறும் கருத்துகளில் தானும் வலுவான நம்பிக்கை உடையவராக இருத்தல்.
- கருத்தேற்றத்திற்கான மகிழ்ச்சியரன சூழலை உருவாக்கல்.
- மாணவர்களிடம் அன்பை அடிப்படையாகக் கொண்ட உறவை வளர்த்தல்.
- கூறும் கருத்துகளுக்கான ஆதாரங்களை முன்வைத்தல்.
- குழு மனப்பாங்கினை விருத்திசெய்தல்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

## உலக சைவப் பேரவையின் கொடிதினம்




வழமைபோல இந்த வருடமும் மகா சிவராத்திரி தினத்தன்று உலக சைவப் பேரவை சைவக்கொடி தினத்தை ஏற்பாடு செய்திருந்தது. உலக சைவப் பேரவையின் இலங்கை கிளைத் தலைவர் திரு. கா. தயாபரன் தலைமையில் கொழும்பு பம்பலப்பிட்டி மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இது தொடர்பான சகல ஒழுங்குகளையும் உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை உப தலைவர் விடைக்கொடிச்செல்வர் கலாநிதி சின்னத்துரை தனபாலா அவர்கள் மேற்கொண்டிருந்தார். "ஒவ்வொரு மாவட்டங்களிலும் கொடி விற்பனை மூலம் கிடைக்கும் நிதியானது, அந்தந்த மாவட்டங்களிலுள்ள அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும், விழிப்புலன்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

நான்காவது நினைவு தினம் (17.02.2021)

## மறக்கமுடியாத மனிதநேயர் அமரர் கயிலாசபிள்ளை அவர்கள்



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவராகப் பதவிவகித்த மனிதநேயர் வி. கயிலாசபிள்ளை அவர்களது நான்காவது நினைவு தினம் கடந்த மாதம் (பெப்ரவரி) 17ஆம் திகதியாகும். இவர் 1986ஆம் ஆண்டு இந்து மாமன்றத்தின் பிரதி தலைவராக தெரிவு செய்யப்பட்டார். 1992ஆம் ஆண்டு இந்து மாமன்றத்தின் தலைவர் திரு. வே. பாலசுப்பிரமணியம் அவர்களது மறைவுக்குப் பின், திரு. கயிலாசபிள்ளை தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். 2012 டிசெம்பர் மாதம் வரை மாமன்றத் தலைவராகப் பணியாற்றிய இவர், பின்னர் மறையும் வரை மாமன்ற அறங்காவலர் சபையின் தலைவராக செயலாற்றியிருக்கிறார்.

அமரர் கயிலாசபிள்ளை அவர்கள், ஏற்கனவே இலங்கையிலுள்ள பிரபலமான வர்த்தக மற்றும் நிதி நிறுவனங்களில் நிதி முகாமைத்துவம் சார்ந்த பதவிகளை வகித்திருப்பதுடன், பின்னாளில் ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர்களுள் ஒருவராகவும், தொடர்ந்து ஜோன் கீல்ஸ் குழுமத்தின் பிரதித் தலைவராகவுமிருந்து ஆற்றிய சேவைகளும் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றன. இதற்கும் மேலாக, இவர் சமய, சமூக நிறுவனங்கள் பலவற்றில் இணைந்து ஆற்றிய பெரும் பணிகளும் போற்றுதற்குரியன.

மென்மையாகவும், பண்பாகவும் பேசும் இயல்பு, அனைவரையும் அன்பாக அரவணைக்கும் தன்மை, மனித நேயம், மனித அபிமானம் என்பன அமரர் கயிலாசபிள்ளை அவர்களது மேலான குணாதிசயங்களாகும். இவர், 2017 பெப்ரவரி 17ஆம் திகதியன்று காலமானார். இவர் ஆற்றிய அளப்பரிய சேவைகள் காலத்தால் மறக்கப்பட முடியாதவை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# இந்நாட்டு மன்னர்கள்

- டொமினிக் ஜீவா -

முதலாவது உலக மகா யுத்தத்தின்போது, இறக்குமதியாக்கப்பட்ட 321ஆம் நம்பர் பஸ் இன்னமும் பிரயாணிகளை 'ஏற்றி இறக்கி'க் கொண்டிருக்கும் பெருமை, எங்கள் நகரத்துப் பஸ் நிலையத்துக்குத் தனிப் பெரும் சொந்தமாக இருந்து வருகிறது. இந்த அற்புதமான சம்பவத்தை எங்கள் பஸ் நிலையத்தைத் தவிர வேறு எங்கும் பார்க்க முடியாது. இப்படியான அதிசயத்தை எண்ணி எண்ணிப் பல தடவை ஆச்சரியப்பட்டவர்கள் உண்டு. இப்படிப்பட்ட புகழை முறியடிப்பதற்கு வேறெந்த நாட்டுப் பட்டணங்களாவது முன் வந்தாலும், இந்த ஒரேயொரு விசயத்தில் மட்டும் எங்கள் நகரத்து பஸ் நிலையம் நிச்சயமாக அவை யாவற்றையும் தோற்கடித்து விடும் என்பது உறுதி!

இப்படிப்பட்ட சர்வதேசப் புகழைத் தனியுடைமையாகக் கொண்ட நமது பட்டணத்துப் பஸ் நிலையத்தில் ஒருநாள், வெள்ளிக்கிழமை: மாலை ஐந்து மணி.

காற்சட்டை சகிதம் ராஜ்கபூர் மீசையுடன் 'ஜங்கி'த் தலையிழுப்பு அலங்காரத்துடன் வெகு 'டிப்டாப்'பாக 'டிரஸ்' பண்ணிக் கொண்டு அலட்சிய சுபாவத்துடன் எங்கேயோ தனது பார்வையைச் செலுத்தியபடி காட்சியளித்தான் வாலிபன் ஒருவன்.

பஸ் நிலையத்து முன்னாலிருக்கும் பழக்கடைகளிலிருந்து 'வயிற்று வலி' வந்திடுச்சே, அக்கா! என்ற விளம்பர வானொலி இசை, நிலையத்தில் நின்றவர்கள் அத்தனை பேர்களின் காதுகளையும் செவிடுபடும்படி செய்து கொண்டிருந்தது. தலைவலி மாத்திரைக் கம்பெனிக்காரர்கள்தான் அந்த வயிற்று வலி விளம்பரத்தைச் செய்கிறார்களோ, என்னவோ!

இந்தக் களேபரத்தில் பஸ்கள் போவதும் வருவதுமாய் இருந்தன. பிரயாணிகள் ஏறுவதும் இறங்குவதுமாய் இருந்தனர்.

இவை ஒன்றையுமே கவனிக்காமல் அந்த வாலிபன், தெரு விளக்குக் கம்பத்தில் ஒரு கையை ஊன்றியபடி முன்னைப் போலவே நின்று கொண்டிருந்தான்.

"ஐயா..." பின்னாலிருந்து குரல் கேட்டது.

வாலிபன் தலையைத் திருப்பிக் குரல் வந்த பக்கத்தைப் பார்த்தான்

சிறிய வெண்தாடி, அறுபதோ, எழுபதோ என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாதே வயதுத் தோற்றம்' குடுகுடுப்பைக் காரனைப் போல, பல வர்ணத்துண்டுத் துணிகளை ஒட்ட வைத்துத் தைத்து, உடை என்ற பெயரால் அரையில் ஒரு துண்டு' எண்ணெயற்று எரிந்து கொண்டிருக்கும் விடி விளக்கைப் போல் சோபையற்ற கண்கள், அக்கண்களில் பயம் கலந்த சோகம், இத்தனை அலங்காரங்களுடன் 'பசியில் கிடக்கும் திருவுரு'வமாகக் காட்சி தந்தான், ஒரு கிழவன். அவனொரு பிச்சைக்காரன்.

'என்ன?' என்று கேட்கத் தோன்றவில்லை வாலிபனுக்கு. இப்படியானவர்களைச் சந்திப்பதற்காகவா அவன் அந்த உடைகளைத் தேர்ந்தெடுத்து அணிந்து கொண்டிருக்கிறான்? இப்படியான பஞ்சைப் பனாதைகளை விசாரிப்பதற்காகவா அவன் நிலைய ஓரத்தில் நின்றபடி மோனத்தவம் செய்து கொண்டிருக்கிறான்? அவன் எண்ணங்கள் வேறு! அவன் இலட்சியமும் வேறு! இருந்தும் மனம் ஏனென்று கேட்கத் தோன்றினாலும் உடை அவனைத் தடுத்துவிட்டது. வாய் பேசாமல் தலையைத் திருப்பிக் கொண்டான்.

மீண்டும், "ஐயா.....!" என்று பரிதாபமாக அந்தக் குரல் ஒலித்தது.

வாலிபனுக்கு ஏனென்று கேட்க எண்ணமுமில்லை விருப்பமுமில்லை. இருந்தும் அலட்சியமாக அந்தக் கேள்வியைக் கேட்டான். "என்னது? என்ன வேணும் உனக்கு?"

"ஐயா.....ஒரு பத்து சதம் குடுங்க. பசியாயிருக்கு" வெறும் தேத்தண்ணி குடிக்கப்போறன்....." என்று சொல்லிக் கொண்டு உதட்டை நாக்கால் நனைத்தபடி உதட்டில் ஈரப்பசுமையைத் தடவி விட்டுக் கொண்டான் கிழவன். கிழவனின் முகம், முகத்தின் தோற்றம். கண்களின் வேட்கை எல்லாமுமாகச் சேர்த்து அவன் பசி வியாதியினால் வேதனைப்படுகிறான் என்று சொல்லாமல் சொல்லின. உண்மையும் அப்படித்தான்.

வாலிபன் மௌனமாக நின்றான்.

கிழவனுக்குச் சந்தேகம் தோன்றியது. தான் கேட்பது ஐயாவின் காதில் விழவில்லையோ, அல்லது தான் சொல்ல நினைத்தது தன் வாயிலிருந்தே வார்த்தைகளாக வெளிவரவில்லையோ என்ற சந்தேகம் வந்து விட்டது. தொண்டையை ஒரு முறை செருமிக் கொண்டான்.

"ஐயா, வெறும் தேத்தண்ணிக்கு பத்துச் சதம் குடுங்க.......... ரொம்பவும் பசியாயிருக்கு." இதைக் கொஞ்சம் உரத்த குரலில் சொல்லி வைத்தான்.

வாலிபன் 'சள்ளென்று' விழுந்தான். "இந்தா, போ...... போ! காசுமில்லை, ஒண்டுமில்லை! சும்மா அலட்டாமல் போய்த் தொலை!"

கிழவன் இதைக் கேட்டுப் போய்விடவில்லை. இந்தச் சிறிய திட்டைக் கேட்டு அசந்துவிடும் பேர்வழியல்ல அவன். தொழில் முறையில் இப்படிப் 'பலதும் பத்தும்' நடக்கத்தான் செய்யும். இதைத் தனது தினசரித் தொழில் அநுபவத்தில் கண்டறிந்தவன். அப்படித்தான் ரோஷம் கொண்டு அப்பால் போய் விட்டால் அப்புறம் இந்த சாண் வயிற்றுக்கு அவனால் எப்படிப் பதில் சொல்லித் தப்பிவிட முடியும்?

வயிறு அவனைப் பேசச் செய்தது. வாய் இரந்து வேண்டிற்று. "ஒரேயொரு ஐந்து சதம் குடுங்க. ரொம்பப் புண்ணியமாய் இருக்கும். ஆண்டவன் உங்களுக்கு ஒரு குறையும் வைக்கமாட்டான். மலைபோல வாறதெல்லாம் பனி போல............."

பிச்சைக்காரன் தனது அநுபவக் கலையைக் காட்டத் தொடங்கினான். அவனுக்குத் தெரியும். எத்தனையோ இளகாத நெஞ்சங்களையெல்லாம் தனது 'கலைச் சொற்கள்' மூலம் இளக வைத்துத் திக்குமுக்காடச் செய்த சம்பவங்கள்.

சென்ற வெள்ளிக்கிழமை கூட... இதேயிடத்தில் ஒரு கல்லூரி மாணவன் மாணவியுடன் ஏதேதோ 'கதை'த்துக் கொண்டு நின்றான். அவன் அடிக்கடி கைலேஞ்சியை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொள்வதும், மாணவியுடன் அர்த்தமற்று, அசட்டுப் புன்னகை செய்வதும் கிழவனின் 'கலைக்கண்'களுக்குத் தட்டுப்பட்டு விட்டது. அவர்களை, அவர்களின் வயதை, அவர்கள் கொண்டிருக்கும் 'அந்த' அதையும், ஒரு நொடியில் புரிந்து கொண்டான். உடனே தொழில் ஞாபகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைப் பற்றிக் கொண்டது. அத்துடன் கொஞ்சம் கலையையும் சேர்த்துக் கொண்டான்.

"ஐயா......"

அந்த வாலிபன் திரும்பிப் பார்த்தான்.

கிழவன் தொடர்ந்து சொன்னான்: "மனம் போல உங்கள் வாழ்வு சிறக்க வேணும், ஆண்டவன் உங்களை ஆசீர்வதிப்பார். உங்களுக்கு ஒரு குறையும் வராது! மலைபோல வாறதெல்லாம் பனிபோலப் போய்விடும்...." நீட்டி முழக்கிப் 'பிச்சைக்காரச் சோதிடம்' சொன்னான்.

மாணவன் லேசாகச் சிரித்தான். அவன் சிரிப்பில் வெட்கம் படர்ந்திருந்தது. மாணவியும் சிரித்து வைத்தாள்! அவள் சிரிப்பில், கொழு கொம்பில் படரத் துடிக்கும் கொடியின் துடிதுடிப்பு லேசாகக் காட்சியளித்தது. இருவரும் புன் சிரிப்புச் சிரித்துக் கொண்டனர்.

அவன் அவளைப் பார்த்தான். அவளும் அவனைப் பார்த்தாள். இருவர் கண்களும் நயன பாஷையில் ஏதோ பேசிக் கொண்டன. அதில் 'ஏதோ' அர்த்தம் தொனித்தது.

மாணவன் பர்ஸைத் திறந்தான். 'சில்லறை இல்லையே' என்று முணுமுணுத்தவன், ஐம்பது சதக் காசை எடுத்து அலட்சியமாகக் கிழவன் கையில் போட்டான்.

இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டு நின்ற மாணவி மாணவனைப் பார்த்து 'அந்தப் புன்சிரிப்பை'ச் சிதற விட்டாள். அவள் கண்களில் வியப்பும், காதலும் விரவி நின்று ஒளி செய்தன.

கிழவனும் தேர்தல் காலத்தில் சில தலைவர்கள் போடுவதைப் போல, நீண்ட கும்பிடு ஒன்றைப் போட்டு விட்டு நகர்ந்தான்.

இந்தச் சம்பவம் அவனது ஞாபகத்துக்கு வந்ததும், அவனது வாய் சும்மா இருக்கவில்லை. ராகம் போடத் தொடங்கி விட்டது.

"உங்கள் மனம்போல வாழ்வு உங்களுக்குக் கிடைக்கும். ஆண்டவன் கிருபையால் உங்கள் மனதிலுள்ள விருப்பங்கள் எல்லாம் கூடிவரும். ஒரு ஐஞ்சு சதம் குடுங்க ஐயா......" என்று பஞ்சப்பாட்டுப் பாடினான்.

"அட சீ! முகரக் கட்டையைப் பாரு! மனிசனைச் சும்மா அரட்டுகிறாயே, மரியாதையாகப் போகிறியா, இல்லைப் பொலீஸைக் கூப்பிடட்டுமா?" என்று வாலிபன் சீறி விழுந்தான்.

பொலீஸ் என்ற வார்த்தையைக் கேட்டதும் பிச்சைக்காரக் கிழவன் திடுக்கிட்டு விட்டான். பல தடவைகளில் பிச்சைக்காசில் பங்கும் பதிலுக்கு உதையும் வாங்கியது அவனுக்கு ஞாபகம் இருந்தது. உலக சமாதானம் என்ற கோஷத்தைக் கேட்டு ஓடி ஒழிக்கும் யுத்த வெறியனைப் போல, கிழவன் பொலீஸ் என்ற வார்த்தையைக் கேட்டதும் ஒதுங்கி நிழலில் நின்றான். அவன் கவனம் அப்போதும் அந்த நாகரிக வாலிபன் மேல்தான் இருந்தது.

ஐந்து நிமிஷங்கள் சென்று விட்டன.

'மாட்டினி ஷோ"... முடிந்து ஐந்நூறு கல்லூரி மாணவர்கள், பஸ்ஸைப் பிடிப்பதற்காகக் 'குடல் தெறிக்கும்' வேகத்தில் ஓடோடி வந்தனர்.

அவர்களைக் கண்டதும் காவல் நின்ற வாலிபனுக்கு முகம் மலர்ந்தது. அகமும் குளிரத்தான் செய்தது. மகிழ்ச்சியுடன் அவர்கள் ஏறப்போகிற பஸ்ஸை நோக்கி நகர்ந்தான்.

"ஐசே, பிரதர்ஸ் பிளீஸ்! ஒரு ஐம்பது சதம் குடுங்க! ஒரு 'பிப்ரி சென்ஸ் குடுத்தால் போதும்"என்றான் காத்து நின்ற நாகரிகப் பிச்சைக்காரன்.

இந்த வார்த்தைகளை அவன் சொன்னபோது வெகு அலட்சியமாகச் சில ஆங்கில வார்த்தைகளைச் சேர்த்துச் சொன்னான். அத்துடன் இரண்டு கைகளையும் காற்சட்டைப் பைக்கள் நுழைத்தபடி பார்த்துப் புன்சிரிப்புச் சிரித்தான்.

வந்தவர்கள் அவனை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தனர். அவன் கேட்ட பாணி, அவனின் புன்முறுவல், அவன் உடுத்தியிருந்த உடை ஆகியவை, வந்தவர்களில் ஒருவனுக்கு அவன் மீது அனுதாபத்தை ஏற்படுத்தியது. தன்னுடைய எதிர்காலம்கூட, இப்படித்தான் படித்துவிட்டு வேலை கிடைக்காமல் தினசரித் தேவைகளுக்கே 'தரிகிணதோம்' போடும் என்று பயந்தானோ, ஐம்பது சதக் குத்தியை எடுத்துச் சுண்டிவிட்டான்.

பஸ் நகர்ந்தது.

சுண்டி விடப்பட்ட காசு நிலத்தில் கிடந்த கல்லில் பட்டு கணீரென்று ஒலித்தது.

வாலிபன் ஆவலுடனும் பரபரப்புடனும் அந்த ஐம்பது சதத்தைக் குனிந்தெடுத்தான்!

அன்று வெள்ளிக்கிழமை. இலங்கையில் சுதந்திர தினம் என்று 'வானொலி பெட்டி' அறிவித்தது. அத்துடன் வானொலிப் பாட்டு இனிமையுடன் ஒலித்தது.

"எல்லோரும் ஓர் குலம்! எல்லோரும் ஓரினம்! எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்! எல்லோரும்..."

இந்தப் பாட்டுக்கூட, இந்த நாட்டின் விளம்பரக் கலையின் தந்திரமோ, என்னமோ!

"இவனும் ஒரு பிச்சைக்காரன்தானா?" என்று முதலில் முணுமுணுத்தான் கிழவன். வேலை கிடைக்காததினால் என்னைப் போல இந்நாட்டு மன்னர்கள் கோஷ்டியில் சேர்ந்துள்ளான் போலும் என்று தனக்குள்ளே சமாதானம் கூறிக் கொண்டான். அந்த பிச்சைக்காரக் கிழவன்.

**(இந்த சிறுகதை'டொமினிக் ஜீவா சிறுகதைகள்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது. 01.07.1956 வீரகேசரி பத்திரிகையில் வெளிவந்துள்ளதாக நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.)**

**(9ஆம் தொடர்ச்சி )**

செவிப்புலன் அற்றவர்கள்மற்றும்ஊனமுற்றவர்களுக்கான மனிதாபிமான செயற்திட்டங்களுக்கும், பலவகையிலும் பாதிக்கப்பட்டு வசதி குறைந்த நிலையில் வாழும் இந்து மக்களின் வாழ்வாதார உதவிகளுக்கும் பயன்படுத்தப்படுவது வழக்கமாகும் தற்போது நாடாளாவிய ரீதியில் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கொடிதின நிகழ்ச்சிகள் கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய நடத்தப்பட்டன" என கலாநிதி சின்னத்துரை தனபாலா அவர்கள் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மனித வாழ்வை மேன்...

நமக்கும் மேலாக ஒரு சக்தியுள்ளது. அதுவே நம்மை வழி நடத்துகின்றது என்பது சமயங்களின் அடிப்படையான ஆழ்ந்த தத்துவமாகும். இவ்வாறான உறுதியான நம்பிக்கை நம்மை வந்தடைந்து விட்டால் தன்னம்பிக்கையுடன் நல்வழியில் வாழத் தலைப்பட்டு விட்டால் தன்மானம் கொண்ட மனிதனாக வாழலாம்.

இவ்வாறு ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியான சிவபிரானை வழிப்பட்டு சிவசக்தி அருள் நாடி தனித்திருந்து, பசித்திருந்து, விழித்திருந்து நோற்கப்படும் மகா சிவராத்திரி விரதமானது மனித குலத்தின் மேன்மையின் திறவுகோலாகும். இவ்விரத நன்னாளில் அதர்மமும், ஆணவமும் அழிந்து எங்கும் நிம்மதி நிறையப் பிரார்த்திப்போம். நம்பினோர் கெடுவதில்லை என்ற கூற்றிற்கமைய எம்மை வாட்டும் துன்பங்கள் துடைத்தெறியப்பட எம்பெருமான் திருவருள் கிட்டும். வாழ்வு வளம் பெறும், ஒளி பெறும். அதர்ம நிலை அகன்று எங்கும் நிம்மதி நிலைக்கும் என்ற நம்பிக்கையுடன் பிரார்த்திப்போம்!.

(7ஆம் பக்க தொடர்ச்சி)

## எல்லா உயிரும் ............

உயிர்களின் புலால் உடம்பை உண்ணாமல் விடுதல். இதனை,

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா வுயிருந் தொழும்.**

எனும் குறள் மூலம் உணர்த்துகின்றார்.

எனவே உலகிலுள்ள உயிர்கள் எல்லாம் இன்புற்று இருக்க வேண்டும் என்று விரும்பும் நாம் பிற உயிர்க்கு வரும் துன்பத்தை எமக்கு வந்த துன்பமாகக் கருதி உதவுதல் வேண்டும்.

நமது தேட்டத்தைப் பகுத்து இல்லாதோர்க்குக் கொடுத்துப் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் ஆகியவற்றைச் செய்தும் தீய செயல்களைச் செய்யாமலும் குறிப்பாகக் கொல்லாமலும் கொன்றதைத் தின்னாமலும் வாழ்வதன் மூலம் எல்லா உயிரும் இன்புற்றிருக்க உதவ வேண்டும், திருக்குறளைக் கற்றதன் பயன் இதுவாதல் வேண்டும்.

**(நன்றி: முப்பால் - திருக்குறள் மாநாடு சிறப்பு மலர் - 2011-கொழும்பு தமிழ்ச் சங்கம் வெளியீடு)**

## லண்டன் எஸ்.நாகராஜா மறைவு



யாழ். மாவட்டம் கைதடியை பிறப்பிடமாகவும், ஐம்பது வருடங்களுக்கும் மேலாக லண்டனில் வாழ்ந்து வந்தவருமான திரு. சின்னத்தம்பி நாகராஜா கடந்த மாதம் (பெப்ரவரி) காலமானார்.

சமயத் தொண்டரும், ஆன்மீகப் பற்றாளருமான இவர், யோகர் சுவாமிகளால் லண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டவர். லண்டன் பாரதீய வித்தியாபவன் நூலகராகப் பணியாற்றி வந்தார். யோகர் சுவாமிகளைப் பற்றிய சிறப்புகளையும், அவரது நற்சிந்தனைகளையும், லண்டன் வாழ் மக்களுக்கு அறியச் செய்வதில் பெரிதும் செயற்பட்டவர்.

இவர் ஏற்கனவே இலங்கையிலிருந்தபோது கைதடி மார்க்கண்டு சுவாமிகள், சாந்த சுவாமிகள் போன்ற மகான்களது தொண்டனாகவும் விளங்கினார்.

## உரும்பிராயில் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டதன் ஓராண்டு நிறைவு நிகழ்வு



கடந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் தஞ்சாவூர் தமிழ்த்தாய் அறக்கட்டளையினரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இரண்டாவது உலகத் திருக்குறள் மாநாட்டின்போது, உரும்பிராய் கிராமத்தில் நிறுவப்பட்ட திருவள்ளுவர் சிலை ஓராண்டு நிறைவு நிகழ்வு, கடந்த மாதம் (பெப்ரவரி) 21ஆம் திகதி காலை இடம்பெற்றது.

ஓய்வுநிலை அதிபரும், ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளருமான திரு. அப்பாத்துரை ஈஸ்வரபாதம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்ச்சியின்போது ஓய்வுநிலை ஆசிரியர் திரு. பொ. கிருஷ்ணானந்தன், உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை அதிபர் செல்வி வாசுகி பஞ்சாட்சரம், உரும்பிராய் கற்பகவிநாயகர் கோவில் பரிபாலன சபை தலைவர் திரு. ஐ. சிவபாலசுந்தரம் ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றினார்கள். திரு. எஸ். அருந்தவரத்தினம் நன்றியுரை வழங்கினார்.

சிறப்பு அம்சமாக உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை மாணவர்கள் வழங்கிய திருக்குறள் இடம்பெற்றது.

மேற்படி திருவள்ளுவர் சிலை தஞ்சாவூர் தமிழ்த்தாய் அறக்கட்டளையினரின் அன்பளிப்பாக, அறக்கட்டளையைச் சேர்ந்த உடையார் கோயில் குணா அவர்களால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் நடந்த இரண்டாவது உலகத் திருக்குறள் மாநாட்டின்போது உரும்பிராய் கிராமத்தைச் சேர்ந்தவரும், தற்போது லண்டனில் வசித்து வருபவருமான பொதுநல சேவையாளர் திரு. போல் சத்தியநேசன் அவர்களிடம் இந்திய உயர் ஸ்தானிகராலயம் வள்ளுவர் சிலையை கையளித்திருந்தது. இவரே சிலையை உரும்பிராய் கிராமத்தில் நிறுவ வேண்டும் என்பதில் பெரிதும் ஆர்வம் காட்டி செயற்பட்டவர். சிலை அமைப்பதற்கான இடத்தை உரும்பிராய் கற்பக விநாயகர் கலாசார மண்டபத்தின் வளாகத்தில் அதன் உரிமையாளர்களான திரு. க. தர்மகுலசிங்கம், திரு. க. ஜெயவீரசிங்கம் ஆகிய இருவரும் வழங்கி உதவியிருந்தனர்.

வள்ளுவர் சிலையை பொருத்துவதற்கான கட்டட அடித்தளத்தை ஊரெழு ஜெயசன்ஜன் கட்டட அமைப்பு நிறுவனத்தின் உரிமையாளர் திரு. சஞ்செயன் அவர்கள் (கட்டட ஒப்பந்தக்காரர் அமரர் சண்முகநாதன் அவர்களின் புதல்வன்) தனது சொந்தச் செலவில் அமைத்துக் கொடுத்ததுடன், கூரை அமைப்பு மற்றும் இதர வேலைகளுக்கான நிதியுதவியை கனடாவிலுள்ள உரும்பிராய் கிராமத்தைச் சேர்ந்த மக்களும், லண்டனிலுள்ள திரு. க. தர்மகுலசிங்கம் மற்றும் திரு. க. ஜெயவீரசிங்கம் அவர்களும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலையின் பெருமை பேணுவோம்!

-தெல்லியூர் சி.ஹரிகரன்-

"மூவா இளமையும் காட்டி முதுமை அழகுங் காட்டி காலந்தோறும் சிறந்துநிற்கும் ஒப்பற்ற மதமாம் இந்துமதம்." இந்த இந்துமதத்தின் அடிநாதமாக ஈழத்தின் வடபகுதி யாழ்ப்பாணக் குடாநாடு சைவப் பாரம்பரியத்துடன் வரலாற்றுப் பிரசித்திபெற்று விளங்குகிறது. ஈழத்தைச் "சிவபூமி" என்று அழைக்கப்படும் பெருமையும் இந்த மண்ணுக்குண்டு.



நான்குபுறமும் கடலால் சூழப்பட்டு, அந்தக் கடற்கரையில் ஓங்கியெழுகின்ற பேரலைகள் அதன் கரையினை முத்தமிட்டு வெண்ணிறநுரை பரப்புகின்ற அழகிய சிறப்புமிகு பெருமை கீரிமலைக்குண்டு. நகுலகிரி முனிவரின் கீரிமுகம் நீங்கப்பெற்றமையால் "கீரிமலை" என இந்தப் பிரதேசம் பெயர்பெற்றதாக இதிகாச வரலாறுகள் சான்று பகர்கின்றன. வடக்கில் பிதிர்க்கடன் செலுத்தும் புனித தீர்த்தக்கரை இங்கு அமைந்துள்ளது. கீரிமலை, கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம் பகுதிகளை இணைத்து "கோவிற்கடவை" என்றொரு பெயரும் முன்னொரு காலத்தில் இருந்ததாகவும் புராண இதிகாச வரலாறுகள் கூறுகின்றன.

கீரிமலை பிரதேசத்துக்குள் கால்பதித்தாலே சிவ உணர்வு எம் சிந்தையில் பதியும். இந்தக் கிராமத்தின் பிரசித்திபெற்ற ஆலயங்களாக நகுலேச்சரம், கடற்கரைச் சித்தி விநாயகர் கோயில், மாரியம்மன் கோயில், குழந்தைவேற்சமாதிச் சிவாலயம், சுப்பிரமணியர் ஆலயம், காசி விசுவநாதர் கோயில் என்ற ஆலயங்களும், கிழக்கு எல்லையில் மாவிட்டபுரம் என்ற பிரசித்திமிக்க ஆலயமும் உள்ளன. வடக்கில் பாக்குநீரிணைக் கடல் உள்ளது. இங்கு பிதிர்க்கடன் செலுத்த வருவோரும், தம் குறை களைய சிவனை நாடி வரும் அடியார்களுக்கு அவர்கள் வயிறாறி, இளைப்பாறிச் செல்ல நகுலேஸ்வரர் ஆலயச் சூழலில் கடற்கரைக்கு அருகில் சிறாப்பர் மடம், வைத்தியலிங்கம் மடம், கிருஷ்ணபிள்ளை மடம், பிள்ளையார்கோயில் மடம், நாராயணபூடர் புண்ணிய தரும மடம், துறவிகள் ஆச்சிரமம் என ஆறு மடங்கள் சிறப்புற அமைந்துள்ளன.

துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்ட யுத்தப் பாதிப்புக்களால் இந்த மடங்கள் முழுமையுமாக அழிவுற்றன. எமது வரலாற்றுச் சின்னமாக அமைந்த ஈழத்து பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரர் ஆலயமும் பாரிய அழிவை எதிர்கொண்டது. யுத்தம் நிறைவடைந்தபின் பிதிர்க்கடன் செலுத்துவதற்காக கீரிமலைக்குச் செல்வோர் இளைப்பாற ஓர் இடமின்றிப் பெரிதும் தவித்தார்கள், சிரமப்பட்டார்கள். சிவனிடம் நொந்து, மெய்யுருகித் தமது குறைகளை ஒப்புவித்தார்கள். இலங்கையின் ஆட்சி மதம் அங்கு கோலோச்ச முற்பட்டது. பாரம்பரிய சைவ வரலாறு திரிபுபடுத்தப்படுமோ என்ற அச்சம் இந்துக்கள் மனதில் ஆழ வேரோடியது.

இந்த நிலையில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் பிறந்து வெறும் 32 வருடங்கள் வாழ்ந்த ஆதிசங்கராச்சாரியார் பூரி, காஞ்சி, சிறுங்கேரி, துவாரகை ஆகிய இடங்களில் நான்கு மடங்களை நிறுவி, ஆறு மதங்களை தோற்றுவித்து, பத்து உபநிடதங்களுக்கு உரை எழுதி, சிவன்மீது சிவானந்த லகரி, சக்திமீது சௌந்தர்ய லகரி, விஷ்ணுமீது பஜகோவிந்தம், முருகன் மீது ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கம், விநாயகர் மீது கணேச பஞ்சாட்சரம் பாடி சாதாரண மனிதர்களால் சாதிக்கமுடியாத சாதனைகளையும் போதனைகளையும் ஆற்றி சைவத்தைக் காத்தமை போன்று, ஆதிசங்கரர் போன்று ஈழத்தில் அவதரித்து, கீரிமலையின் இந்த அவலநிலையைக் கண்ணுற்ற கலாநிதி ஆறு.திருமுருகன் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் எதிர்நீச்சலிட்டு, தனது நண்பர் - ஜனாதிபதி சட்டத்தரணி அமரர் நீலகண்டன் அவர்களின் துணையுடன் 2012 ஆம் ஆண்டு கீரிமலையில் ஓய்வுநிலை ஆசிரியர் அமரர் விஸ்வநாதன் குடும்பத்தினரால் வழங்கப்பட்ட காணியில் சைவமணம் பரப்பும் சிவபூமி மடத்தை பிரமாண்டமாக நிறுவினார். பிறமதப் பிரசன்னத்தைத் தகர்த்தார். அதன்பின் யாத்திரிகர் விடுதியை அமைத்து அந்தப் பிரதேசத்தை சைவ மணங்கமழும் புண்ணிய சைவபூமியாக உருவாக்கினார்.

அந்த சிவபூமி மடத்தின் ஊடாக ஞாயிறு, பௌர்ணமி, குருபூசை நாள்களில் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகின்றது. பாடசாலை மாணவர்கள் சமய நிறுவனங்கள் யாத்திரையாக வரும் போது தங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

சிவலிங்கப்பெருமான், நடராசப்பெருமான் மடத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டு தினமும் உணவு படைத்து வழிபாடு நடைபெற்றுவருகின்றது. அந்தியேட்டி கிரியை செய்யவரும் தூர இடத்து அன்பர்கள்ஆறுதல் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது, அங்கு அழிவடைந்த கிருஷ்ணபிள்ளை மடம் இருந்த இடத்தை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் அமரர் கிருஷ்ணபிள்ளையின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் வழங்கப்பட்ட 19 பரப்புக் காணியில் ஆதரவற்ற - பிள்ளைகளால் கைவிடப்பட்ட - முதியவர்களுக்காக முதியோர் இல்லம் அமைக்கப்பட்டு விரைவில் திறந்துவைக்கப்பட உள்ளது. எத்தனையோ எழுத்தாளர்கள், கல்விமான்கள் கூட வாழும்போது பெருமையுடன் வாழ்ந்தவர்கள் முதுமையில் அநாதரவாக ஆதரவற்றுத் தவிக்கின்ற நிலைமையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(13ஆம் பக்க தொடர்ச்சி)

**கீரிமலையின் பெருமை பேணுவோம்!............**

அவர்களின் ஆதரவுக்கு கரம் கொடுப்பதற்காக அவதியுறும் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த பெரியவர்களுக்காக - இந்த முதியோர் இல்லம் கீரிமலையில் அமையவுள்ளது. சுழிபுரத்திலும் சிவபூமி முதியோர் இல்லம் 78 முதியவர்களுடன் சிறப்பாக சேவையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. நான் ஆரம்பத்தில் ஆதிசங்கரரை உவமித்தமை போன்று குறுகிய வட்டத்தில் கலாநிதி ஆறு.திருமுருகன் நின்றுவிடாமல் அவரால் கீரிமலை சிவபூமி மடம், கீரிமலை யாத்திரிகர் விடுதி, சிவபூமி முதியோர் இல்லம், கோண்டாவில் மனவிருத்திப் பாடசாலை, கிளிநொச்சி மனவிருத்திப் பாடசாலை, நாவற்குழி அரும்பொருட் காட்சியகம், குப்பிளான் ஞான ஆச்சிரமம், மயிலிட்டி கந்தபுராண ஆச்சிரமம், இயக்கச்சி நாய்களின் சரணாலயம், நாவற்குழி திருவாசக அரண்மனை, திருகோணமலை மனவிருத்திப் பாடசாலை, சிவபூமி திருமூலர் மூலிகைத் தோட்டம், சிவபூமி கலைக்களஞ்சியம், சிவபூமி கல்வி நிதியம், சிவபூமி வாழ்வாதார நிதியம், சிவபூமி மருத்துவ நிதியம், ஆனைக்கோட்டை அபயம் வைத்தியசாலை, சுன்னாகம் சிவபூமி வைத்தியசாலை, சிவபூமி தொழிற்பயிற்சி நிறுவனம் என்பன நிர்வகிக்கப்படுகின்றன.

ஆனாலும், "காய்த்த மரம் அது மிகை கல்லடிபடும்" என்பது சித்தர் வாக்கு. கீரிமலையின் வரலாறு திரிபுபடக்கூடாது, அங்கு சைவமும் தமிழும் வாழவேண்டும் என்பதற்கு கலாநிதி ஆறு.திருமுருகன் எவ்வளவு பாடுபடுகின்றாரோ, எமது மதத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் - மதத்தை வழிநடத்தும் மதகுருமார்களே - அதனை புனிதபூமியாக அறிவிக்கவேண்டும் - நகர அபிவிருத்தி அதிகார சபைக்குக்கீழே அந்தப் பிரதேசத்தை மாற்றவேண்டும் - என்பதற்கான காய்நகர்த்தல்களை செய்து பெரும்பான்மை ஆட்சியாளர்களுக்குத் தமது விசுவாசத்தைக் காட்டவேண்டும் என்பதற்காக உழைக்கின்றார்கள்.

, சைவ மக்கள் இந்த நேரத்தில் விழிப்புடன் செயற்படவேண்டும். பேர்சிவல் பாதிரியாரின் கோரிக்கைக்கு அமைய ஆறுமுகநாவலர் பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்துவிட்டு, தன் அறியாமையால் நொந்து, துவண்டு, அதன்பின் தன் மத அழிவைத் தடுத்துநிறுத்த இந்தியாவிலிருந்து அச்சு இயந்திரம் கொண்டுவந்து, திண்ணைப் பள்ளிக்கூடங்களை நிறுவி சைவத்தையும் தமிழையும் காப்பாற்ற எவ்வளவு சிரமப்பட்டாரோ அதே சிரமம் மீண்டும் ஏற்பட இடமளிக்கக்கூடாது. நாம் விழிப்பாக இருந்து எமது பிரதேசங்கள் சூறையாடப்பட்டு, எமது வரலாறுகள் திரிபுபடுத்தப்படுகின்றமையைத் தடுப்போமாக! வெள்ளம் வந்தபின் அணை கட்டுவது முட்டாள்தனம் அல்லவா?

## "அசல் யாரோ நகல் யாரோ அறியேன் என்று அதிசயித்த மன்னன் சொன்னான் முடிவில் ஒன்று"

### சுனாமி பேபி க.பொ.த சாதாரணப் பரீட்சைக்கு தோற்றினார்



சுனாமி பேபி என அழைக்கப்படும் கிழக்கு மாகாணம் கல்முனையைச் சேர்ந்த ஜெயராஸ் அபிலாஸ் நடைபெற்று முடிந்த கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்.

யார் இந்த மாணவன் என பலரும் கேட்கலாம். 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதியன்று ஆழிப்பேரலை என வர்ணிக்கப்படும் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதை மறந்திருக்கமாட்டீர்கள். இதில் பலர் உயிரிழந்ததுடன், ஏராளமானோர் பாதிக்கப்பட்டிருந்ததையும் அறிவீர்கள். இந்த அனர்த்தத்தில் கல்முனையைச் சேர்ந்த அபிலாஸ் என்ற குழந்தை கடல் அலைகளினால் அள்ளுண்டு செல்லப்பட்டது. அப்போது அந்தக் குழந்தை பிறந்து 67 நாட்கள் தான். 18 மணித்தியாலங்களின் பின்னர் பாறையொன்றினுள் சிக்குண்ட நிலையில் குழந்தை உயிருடன் மீட்கப்பட்டது.

இந்தக் குழந்தை கல்முனை ஆதார வைத்தியசாலையில் தாதியர்களின் பராமரிப்பில் வைக்கப்பட்டு கவனிக்கப்பட்டு வந்தது. சிலநாட்களின் பின்னர் ஒன்பது தாய்மார்கள் இந்தப் பிள்ளையை உரிமை கோரினர். அப்போது ஊடகங்கள் மன்னன் சொலமன் ஆட்சிக் காலத்து சம்பவத்தை நினைவுபடுத்தி எழுதியிருந்தன.

முன்னொரு காலத்தில் இந்தியாவின் மாநிலமொன்றை ஆட்சிபுரிந்து வந்த சொலமன் என்ற மன்னனின் அரச சபைக்கு ஒருநாள் விசித்திரமான வழக்கு ஒன்று விசாரணைக்கு வந்தது பற்றி வரலாற்று நூல்களில் படித்திருக்கிறோம். ஒரு பிள்ளைக்காக இரு தாய்மார்கள் உரிமைகோரி அரச சபைக்கு வந்திருக்கிறார்கள். "ஒரு தாயார் பல பிள்ளைகள் பெற்றெடுப்பதுண்டு. ஆனால் இரு தாய்மார்களுக்கு எப்படி ஒரு பிள்ளை கிடைக்கும்?" என்று சிந்தித்த மன்னன் சொலமன், அரண்மனை காவலனை அழைத்து "இரு தாய்மார்களும் தன் பிள்ளை என்கிறார்கள். ஆளுக்குப் பாதியாக அறுத்துக்கொடு" என்று கட்டளையிட்டபோது, ஒரு பெண் கண்ணீர்விட்டு அழுததையும், மற்றைய பெண் சிரித்துக்கொண்டு நின்றதையும் அவதானித்து, உண்மையான தாயை அடையாளம் கண்டு கொண்டான் என்பது கதையின் சுருக்கம்.

பதினாறு வருடங்களுக்கு முன் அபிலாஸ் என்ற குழந்தைக்கு ஒன்பது தாய்மார்கள் தங்கள் பிள்ளை என உரிமை கோரியபோது, இந்த விவகாரம் நீதிமன்றம் வரை சென்றது. டி.என்.ஏ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, உண்மையான தாயார் அடையாளம் காணப்பட்டார்.

அபிலாஸ் கிழக்கிலங்கை செட்டிபாளையம் மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுதியிருந்தார். தான் ஒரு வைத்தியராக வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் அபிலாஸ் இருப்பதாக, அவரது பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவலைகளில் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்கள்

அ.கனகசூரியர்



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவராக பதவிவகித்த திரு.கந்தையா நீலகண்டன் அவர்களது மூன்றாவது நினைவு தினம் கடந்த மாதம் (பெப்ரவரி) 18ஆம் திகதியாகும்.

எண்பதுகளில் அகில இலங்கை இந்து மாமன்றத்தில் உறுப்பினராக இணைந்து கொண்ட அமரர் நீலகண்டன் அவர்கள் , இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளராகவிருந்த எஸ். சச்சிதானந்தசிவம் அவர்களின் மறைவுக்கு பின்னர் அந்த வெற்றிடத்துக்கு 1990 ஏப்ரல் 28 ஆம் திகதியிலிருந்து தெரிவுசெய்யப்பட்டார். மாமன்ற அலுவலக செயற்பாடுகளுக்கு சொந்தமானதொரு கட்டடம் இல்லாத குறைபாடு இருந்ததால், புதிய கட்டடமொன்றை அமைப்பதற்கான முயற்சிகளை அப்போதிருந்த மாமன்றத் தலைவர் அமரர். வி. பாலசுப்பிரமணியம் மற்றும் சில உறுப்பினர்களுடன் இணைந்து மேற்கொண்டு வெற்றிகண்டவர் திரு. நீலகண்டன். 1996 ஆம் ஆண்டு கொழும்பு மாநகரில் ஐந்து மாடிகளைக் கொண்ட உயர்ந்த கட்டடமொன்று உருவாக்கம் பெற்றமையானது அமரர் நீலகண்டன் அவர்கள் அரும்பெரும் சேவையை எடுத்துக் காட்டி நிற்கிறது என்பது வரலாற்றுப் பதிவாக அமைந்துள்ளது. சமயப் பணியை மட்டும் மேற்கொண்டு வந்த இந்து மாமன்றம், சமூகநல கல்விப் பணிகளை ஆற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, அதனூடாக நாடளாவிய ரீதியில் ஏராளமான இந்து மக்கள் பலவகையிலும் விமோசனம் பெறுவதற்கு வழிவகுத்த பெருமைக்குரியவர். யாழ்ப்பாணத்திலும் மாமன்றப் பணிமனையொன்றை நிறுவவேண்டும் என்ற தனது விருப்பத்தை நிறைவேற்றி வெற்றிகண்டவர்.

இவரது பெருமுயற்சியால் அறிமுகமான இந்து மாமன்ற ஆன்மிக சஞ்சிகையான "இந்து ஒளி" இந்து மக்கள் மத்தியில் பேரபிமானமும் பெருமதிப்பும் பெற்றுத் திகழுவதற்கு, காரணமாக அமைந்திருந்த இவரது ஊக்குவிப்பும்,ஆர்வமும், உறுதிப்பாடும் போற்றுதற்குரியது.

இந்து மாமன்ற பொதுச் செயலாளராகப் பதவி வகித்த அமரர் நீலகண்டன் 2012 டிசெம்பர் 2ஆம் திகதியிலிருந்து மாமன்றத் தலைவராக தெரிவு செய்யப்பட்டு இறக்கும் வரை பெரும்பணியாற்றி வந்தவர்.

இவர் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையின் தலைவராகவும், இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தின் செயலாளராகவும் மட்டுமல்ல கொழும்பு விவேகானந்த சபை போன்ற பல சமய நிறுவனங்களிலும் பொறுப்பான பதவிகளை வகித்து வந்திருப்பதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவிருந்த எஸ். சிவகுருநாதன் அவர்களின் மறைவுக்குப் பின், அடுத்த ஆண்டுப் பொதுக்கூட்டம் வரையிலான சில மாதங்கள் அதன் தலைவராகவும் பணியாற்றியிருப்பதுடன், யாழ். பல்கலைக்கழக பேரவையிலும் உறுப்பினராக இணைந்திருந்து நிறையவே சேவையாற்றியுள்ளார்.

அனைவருடனும் அன்பாகப் பழகும் பண்பு அன்னாரை உயர்த்திவைத்தது. தனிமரமாக மட்டுமல்ல கனிமரமாகவும் நின்று, சைவத் தமிழ் சமூகத்திற்கு பெரு நிழல் தந்த பெருந்தகை என்று இவரை சொல்வதில் தவறில்லை.

## இணுவில் அறிவாலயத்தில் கௌரவிப்பு வைபவம்



கொரோனா வைரஸ் சூழ்நிலையில் நோய் தடுப்பு நடவடிக்கைகளில் மிக சிறப்பாக செயற்பட்ட வலிகாமம் தெற்கு பிரதேச வைத்திய அதிகாரி, சுகாதார உத்தியோகத்தர்கள் என்போரின் சேவை சிறப்புக்காக இணுவில் கந்தன் அறக்கட்டளையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கௌரவிப்பு வைபவம் கடந்த மாதம் (பெப்ரவரி) இறுதியில் இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெற்றது. ஓய்வுநிலை ஆசிரியர் திரு.இ.பாலசந்திரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வின் போது வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் பிரதமவிருந்தினராகவும், கலாநிதி ஆறு. திருமுருகன் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் க.தேவராஜா, பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், ஊடகவியலாளர் திரு.கணபதி சர்வானந்தா ஆகியோரும் மேற்படி வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### திரு. பி. தங்கமுத்து மறைவு



கிளிநொச்சியை சேர்ந்த திரு.பி.தங்கமுத்து அவர்கள் தனது 87வது வயதில் இம்மாதம் முதலாம் திகதியன்று காலமானார். இவர் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியகலாநிதி சத்தியமூர்த்தி அவர்களின் தந்தையாவார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிவபூமி கந்தபுராண ஆச்சிரமம் திறந்து வைக்கப்பட்டது



சிவபூமி அறக்கட்டளையின் மற்று மொரு செயற்பாடாக அமைக்கப்பட்ட கந்தபுராண ஆச்சிரமம் தைப்பூசத் தினமாகிய கடந்த ஜனவரி மாதம் 28ஆம் திகதியன்று மயிலிட்டி கிராமத்தில் திறந்து வைக்கப்பட்டது. ஆதிமயிலிட்டியைச் சேர்ந்த இலங்கைநாயகம் மகேசன் - நகுலேஸ்வரி ஞாபகார்த்தமாக, இவர்களது பிள்ளைகளான சுகுமாறன் அவர்களினதும், ஜெயக்குமாரன் அவர்களினதும் குடும்பத்தவர்களது அன்பளிப்பாக வழங்கிய இல்லம் கந்தபுராண ஆச்சிரமம் திருப்பணிக்கு பயன்படுத்தப்படுகிறது.

மேற்படி கந்தபுராண ஆச்சிரமக் கட்டடத்தில் இலவச வைத்திய சேவையும் இடம்பெற்றுவருகிறது. இதற்கு லண்டன்

## சுன்னாகம் வாழ்வகம் மாணவர்கள் இருவருக்கு பட்டம்





கடந்த மாதம் (பெப்ரவரி) நடைபெற்ற யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் விழிப்புலனற்றோர் வதிவிடமான சுன்னாகம் "வாழ்வகம்" இல்லத்தின் மாணவர்களான செல்வன் விஜயகுமார் விஜயலாதன் சமூகவியல் சிறப்புக் கலைமாணி பட்டத்தையும், செல்வி கட்சினி லோகநாதன் அரசறிவியல் சிறப்புக் கலைமாணி பட்டத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இந்த தகவலை தெரிவித்துள்ள வாழ்வகம் இல்லத்தின் தலைவர் திரு. ஆ. ரவீந்திரன் அவர்கள் இது வாழ்வக சாதனையில் மற்றுமொரு நீட்சி என்றும், குறித்த மாணவர்களது இந்த நிமிர்வானது வாழ்வகத்தின் அயராத முயற்சிக்கு கிடைத்த அரும்பரிசு என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் பத்து மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் தற்போது கல்வி கற்று வருகிறார்கள் என்ற தகவலையும் அவர் தெரிவித்துள்ளார்.

**01.03.2021 - ஜெனன நூறாண்டு நிறைவு**

## புகழ்பூத்த ஒலிபரப்பாளர் அமரர் விவியன் எஸ்.நமசிவாயம்



இலங்கை வானொலியின் நீண்டகால நேயர்களால் மறக்கப்படமுடியாத ஒரு ஒலிபரப்பாளர்தான் விவியன் எஸ். நமசிவாயம் அவர்கள்.

யாழ். மாவட்டத்திலுள்ள காரைநகர் கிராமத்தை பிறப்பிடமாகவும், உடுவில் கிராமத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தவர். 1921 மார்ச் மாதம் முதலாம் திகதியன்று பிறந்தவர்.

ஆரம்பத்தில் பாடசாலை ஆசிரியராகவும், பின்னர் யாழ். மாவட்டத்திலிருந்து வெளிவந்த ஈழகேசரி பத்திரிகையிலும், கொழும்பிலிருந்து வெளிவந்த சுதந்திரன் பத்திரிகையிலும் இணைந்து பணியாற்றியிருக்கிறார்.

விவியன் நமசிவாயம் அவர்கள் ஒலிபரப்புத் துறையில் கொண்டிருந்த ஆர்வம் காரணமாக, 1951ஆம் ஆண்டில் பிரதி எழுத்தாளராக இலங்கை வானொலி தேசிய சேவையில் இணைந்தார். பின்னர் கிராமிய நிகழ்ச்சித் தயாரிப்பாளரானார். அந்நாளில் இவர் தொகுத்து வழங்கிய கிராம சஞ்சிகை என்ற நிகழ்ச்சி விவசாய நேயர்களின் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுத் திகழ்ந்தது. "விவேகச் சக்கரம்" என்ற பொது அறிவுப் போட்டி நிகழ்ச்சியையும் இவர் தேசிய சேவையில் நீண்ட காலம் நடத்தி வந்ததுடன், வானொலியில் பல விவரணச் சித்திரங்களையும் எழுதி வழங்கியிருக்கிறார்.

தனது திறமையினாலும், பெருமுயற்சியினாலும் உயர்நிலையடைந்த விவியன் நமசிவாயம் அவர்கள், 1967ஆம் ஆண்டில் வர்த்தக சேவையின் தமிழ் நிகழ்ச்சி முகாமையாளராகப் பதவியேற்றார். பின்னர் வர்த்தக சேவை கட்டுப்பாட்டாளராக உயர்ந்தார். நேயர்களின் ரசனையை அறிந்து பணியாற்றியதன் மூலம் நேயர்களது பெருமதிப்பைப் பெற்றார்.

இலங்கை வானொலி வர்த்தக சேவை வெறுமனே திரைப்படப் பாடல்களை ஒலிபரப்பும் ஒரு சேவையாக அல்லாமல், அதை தேசிய ஒலிபரப்புக்கு சமமான வகையில் காத்திரமானதாக மாற்றியமைத்த பெருமை இவருக்கு உண்டு. வர்த்தக சேவையில் பல புதிய நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்தார். இவரது ஒரு தசாப்த காலத்து வர்த்தக சேவைப் பணியின்போது இவரால் இடப்பட்ட அத்திபாரமே, இன்றைய வர்த்தக சேவையின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருந்திருப்பதை சிறப்பாகச் சொல்லலாம். இவர் 1977ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்றதன் பின்னரும் இலங்கை வானொலி தேசிய சேவையில் "இளஞ்சுடர்" என்ற பெயரில் கிராமிய இளைஞர்களுக்கான வாராந்த தொடர் சஞ்சிகை நிகழ்ச்சியொன்றை தொகுத்து வழங்கி வந்தார். விவியன் நமசிவாயம் அவர்கள் 1998 ஜனவரி 30ஆம் திகதி காலமானார்.

- சூரியர்

**கொரோனா வைரஸ் தொற்றாளர் எண்ணிக்கை பிந்திய பதிவு (22.03.2021)**

| | சர்வதேசம் | இலங்கை |
|---|---|---|
| பாதிக்கப்பட்டோர் | 12,39,02,672 | 90,200 |
| குணமடைந்தோர் | 9,98,20,830 | 86,759 |
| சிகிச்சை பெறுவோர் | 2,13,53,208 | 2,895 |
| உயிரிழந்தோர் | 27,28,634 | 546 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகா கும்பாபிஷேக விழாவில் நாதஸ்வர கலைஞர்கள் கௌரவிப்பு




கொக்குவில் மாதனை கந்தசுவாமி கோவில் மகா கும்பாபிஷேக வைபவத்தின் போது நாதஸ்வரக் கலைஞர்களான திரு.பி.பாலமுருகன் அவர்களும் இவரது சகோதரரும் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

## தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் முதலாவது விஞ்ஞானத்துறை மாணவி



தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவியான செல்வி தேவதர்சினி தர்மகுலராஜா அவர்கள் இம்மாதம் 18ஆம் திகதியன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கணினி மென் பொறியியற் துறையில் பட்டம் பெற்றார்.அவரது எதிர்காலம் சிறக்க துர்க்காபுர மகளிர் இல்லத்தினர் வாழ்த்துக் களை தெரிவித்து மகிழ்கிறார்கள்.

## உள்ளக விளையாட்டு அரங்கு




இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் இளவாலை ஆனைவிழுந்தான் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகே அமைக்கப்படவிருக்கும் உள்ளக விளையாட்டு அரங்குக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது.

## திரு. இ.சோதிநாதன் மறைவு




இணுவில் கிராமத்தைச் சேர்ந்த திரு.இராசநாயகம் சோதிநாதன் (பாபு) அண்மையில் கனடாவில் காலமானார். முகாமைத்துவக் கல்வி பயின்று பட்டம் பெற்ற இவர் இலங்கையில் ஆசிரியராக பணியாற்றியவர் . பின்னர் கனடா சென்று அங்கு வசித்து வந்தார்

### மயூராபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் மகா கும்பாபிஷேகம்.

கொழும்பு வெள்ளவத்தை மயூராபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

### சிவயோக சுவாமிகள்




**57வது குருபூசை தினம்**
**25.03.2021**

### பங்குனித் திங்கள் பொங்கல் நிகழ்வு



மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் கோவிலில் பங்குனித் திங்களையொட்டி வாரந்தோறும் அடியவர்களால் பொங்கல் வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.

## இசைப்பேரறிஞர் சு.கணபதிப்பிள்ளை மறைவு



முதுபெரும் இசைப்பேரறிஞர் சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளை அவர்கள் இம்மாதம் 16ஆம் திகதி சுழிபுரத்தில் காலமானார். 1938ஆம் ஆண்டு பிறந்த இவர் 1959 ஆம் ஆண்டு இந்தியா சென்று சங்கீதபூஷணம் பட்டம் பெற்றார். 1963 ஆண்டு ஆசிரிய சேவையில் இணைந்துகொண்ட இவர் அனலைதீவு சதானந்த வித்தியாலயம், காரைநகர் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். பின்னர் இசைத்துறை கல்வி அதிகாரியாகவும் பதவி வகித்துள்ளார். ஓய்வுக்கு பின் வட இலங்கை சங்கீத சபை முதலான இசை அமைப்புக்களில் இணைந்து பணியாற்றிய இவர் இசைத்துறைக்கான பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered in the Dept.of Post of Sri lanka Under No- QD/154/New/2021

## மயிலிட்டி கந்தபுராண ஆச்சிரமம் திறப்பு விழா நிகழ்வு (28.01.2021)



## மயிலிட்டி அபயம் இலவச மருத்துவமனை திறப்பு விழா (28.01.2021)




## இணுவில் அறிவாலயத்தில் கௌரவிப்பு வைபவம்



9789557420004
ISBN - 978-955-7420-00-4

இந்தப் பத்திரிகை கோண்டாவில் சிவபூமி தொழி[illegible]பூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டது (மார்ச் -2021)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org